

ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14.

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (4-10-66) இதழ் 235
பராபவ புரட்டாதி 18 ஜ: ஆகிர் 18 செவ்வாய்க்கிழமை



ராஜ பீடி கம்பெனி, கொழும்பு-14

# மந்திரி திருச்செல்வம் பலமாக ஆட்சேபம்

## 'மந்திரி இரியகொல்லையின் கருத்து அரசாங்கத் தீர்மானமன்று'

### பார்லிமெண்ட் விவாதத்தின் போது எதிர்ப்புத் தெரிவிப்போம்'

யாழ்ப்பாணம், செவ்.

போதனு மொழியை நிர்ணயிப்பதில் பெற்றேருக்கு உரிமை வேண்டுமென்று கல்வி அமைச்சின் வெள்ளை அறிக்கை கூறுகிறதேயன்றி இது அரசாங்கத்தின் தீர்மானமன்று.

"கல்வி வெள்ளை அறிக்கை பார்லிமெண்டில் விவாதத்துக்கு வரும்போது, மேற்குறித்த யோசனையை நானும் எனது கட்சியும் பலமாக எதிர்ப்போம். இந்த வெள்ளை அறிக்கையிலே எங்கள் கட்சியின் கொள்கைகளுக்கு மாருகவுள்ள யோசனைகளை நாங்கள் எதிர்த்தே வாக்களிப்போம்."

என்றிவ்வாறு ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், கல்வி மந்திரி திரு. இரியகொல்லை இவ்விஷயமாக ''ஈழநாடு'' நிருபர்மூலம் வெளியிட்ட அறிக்கையை ஆட்சேபித்து தெரிவிக்கின்றார்.

கல்வி அமைச்சர் வெளியிட்ட கருத்துக்கள் அமைச்சர் திருசசெல்வத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதும், அவர் இம்மறுப்பை வெளியிட்டதுடன் போதனுமொழி, பிள்ளைகளின் தாய் மொழியாகவே இருத்தல் வேண்டுமென்றும், பெற்றேருக்கு இவ்விஷயத்தில் உரிமை அளிக்க வேண்டுமென்ற யோசனையைத் தாமும் தமது கட்சியும் எதிர்க்கப் போவதாகவும் தெரிவித்தார்.

தார் என்றும் இத்தகவல்களைப்பற்றித் தாம் பொருட்படுத்தாததால் இதுகுறித்து [illegible] தெரிவித்தார்.

## விவசாயம் செய்ய 1 லட்சம் ஏக்கர் காணி

கொழும்பு, ஞாயிறு

ஒரு லட்சம் ஏக்கர் காணியை விவசாயத்தில் உட்படுத்த கமத்தொழில் பகுதியினர் மூன்றுவருடத் திட்டம் ஒன்றுக்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அனுராதபுரம், புத்தளம் கேகாலை ஆகிய பகுதிகளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலம் காணிகள் சிறு சிறு துண்டுகளாகச் சிதறுண்டிருப்பது தெரியவந்துள்ளது. கணிசமான அளவு விளைச்சலை இப்பகுதியில் கமத்தொழில் பகுதி எதிர்பார்க்கிறது. புதிய நிதிவருடத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டமும் திருத்தி செய்யப்பட்டுவிடுமாகையால், கமத்தொழில் பகுதி இந்த 3 வருட ஒருலட்சம் ஏக்கர் விவசாயத்திட்டமும் வெற்றியளிக்குமென கருதுகிறது.

ஒரு வருடத்தில் இருமுறை விளைச்சலுக்கான திட்டத்துக்கு 8 லட்சம் ரூபாயை ஒதுக்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

## பூட்டான் எல்லைக்குள் சீனத்துருப்புக்கள் ஊடுருவல்

### இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி, அக். 3

பூட்டான் பிரதேச எல்லைக்குள் சீன நான்கு தடவைகள் ஊடுருவல் செய்திருப்பதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

பூட்டான் அரசாங்கத்தின் கோரிக்கை மீது கம்யூனிஸ்ட் சீனவுக்கு இந்தியா அனுப்பியுள்ள ஆட்சேபக்குறிப்பில் கடந்த ஏப்ரல் மாதம் முதல் கடந்த மாதம் வரை நான்கு தடவைகளில் சீனத்துருப்புகள் பூட்டான் பிராந்தியத்துக்குள் அத்து மீறியுள்ளனர் என்றும் இங்கு சீனத்துருப்புகள் படை நிலைகளை அமைப்பதிலும் பாதுகாப்பு அரண்களை நிறுவுவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

## இந்தோனேஷிய புரட்சியில் சீனவின் பங்கு

### சுபந்திரியோ ஒப்புக்கொண்டார்

ஜாகர்த்தா, அக். 3

"கடந்தவருடம் அக்டோபர் மாதத்தில் நிகழ்ந்த திடீர்ப்புரட்சியை நடத்துவதற்கு இந்தோனேஷிய கம்யூனிஸ்டுகளுக்கு உதவி செய்வதாக சீன வாக்களித்திருந்தது" என்று முன்னுள் இந்தோனேஷிய பாதுகாப்பு மந்திரி டாக்டர் சுபந்திரியோ ஒப்புக்கொண்டுள்ளார்.

அக்டோபர் புரட்சியில் பங்குபற்றியதாகக் குற்றம் சாட்டி இவர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைகள் இங்குள்ள இராணுவ நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று டாக்டர் சுபந்திரியோ சா[illegible] பில், சதித்தி[illegible] பர் சுகர்ணோ அறிந்திருந்[illegible]

## கிளிநொச்சி எம். பி. வீட்டுக்கு வாலிபர்கள் படையெடுப்பு

### பொறுத்திருங்கள்; பார்ப்போம் என்று சமாதானம் கூறினர்

யாழ்ப்பாணம், செவ்.

''பாரதூரமான பெரும் நெருக்கடியொன்று ஏற்பட்டுள்ளது. இது மிகவும் மோசமான நிலைமை தேசிய ஐக்கியத்திற்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை. இதைப் பற்றி தலைமைப்பீடம் மிக விரைவில் தீர்மானித்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதிக்காமல் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.''

நேற்றுக்காலை கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், தமது வீட்டிற்கு திரண்டுவந்த நூற்றுக்கணக்கான ஆதரவாளர் மத்தியில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி எம். பி. வீட்டிற்கு நேற்றுக்காலை முதல் ஏராளமானோர், குறிப்பாக வாலிபர்கள் சென்று 'என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள்?' என்று கேட்டார்கள். பலர் டெலிபோன் மூலமும், எதிர்கால நடவடிக்கை என்ன என்று கேட்டதாகத் தெரியவருகிறது.

'பொறுத்திருங்கள் விரைவில் முடிவுதெரியும். தலைமைப்பீடம் இதுபற்றி முடிவு செய்யும்' என கிளிநொச்சி எம். பி. தமது ஆதரவாளர்களுக்குப் பதிலளித்து அனுப்பினர்.

## அனுதரவானவர்களுக்கு 62 தங்கு முகாம்கள்

### கொழும்பில் வெள்ளம் குறைகிறது

கொழும்பு திங்கள்

கொழும்பிலும்பெருமழையினுல் பாதிக்கப்பட்ட மற்ற இடங்களிலும் வெள்ளம் துரிதமாகக் குறைந்து வருகிறது. வெள்ளத்தினுல் வீடிழந்தவர்களுக்கும்பாதிக்கப்பட்டவர்களுக்கும் புனர்வாழ்வளிப்பதில் சமூக சேவைப்பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு மாநகரசபை அனுதரவான நிலையிலுள்ளவர்களுக்கு 62 தற்காலிகத் தங்கு முகாம்களை அமைத்துக் கொடுத்திருக்கிறது. 24,00 பேர் இதன் மூலம் பயன்பெறுவர்.

பாதிக்கப்பட்டஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூபாய்300 அளிக்க கொழும்பு மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கொழும்பு - இரத்தினபுரி போக்குவரத்து தடைப்பட்டபடியேயிருக்கிறது, மற்றப் பிரதான பாதைகளில்போக்குவரத்து வழமைபோல் நடைபெறுகின்றது,

பல்வேறு சமூகசேவைச் சங்கங்கள் அதிகாரிகளுக்கு உதவிசெய்வதில் முனைந்திருப்பதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

## சரோஜா நடனம் இம்மாதம் 14, 15ல் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்.

தென்னிந்திய பிரபல சினிமா நடிகை ஈ. வி. சரோஜா குழுவினரின் நடனக்கச்சேரி இம்மாதம் 5ம், 6ம், தேதிகளில் நடைபெறவிருந்தது. அவர்கள்வந்து சேருவதில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதால் இக்கச்சேரிகள் இம்மாதம் 14ம், 15ம் தேதிகளில் நடைபெறுமென்று இ. போ. ச. இந்து ஊழியர்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கி. பாகிஸ்தான்

## புயலுக்கு 150 பேர் பலி

டாக்கா, அக் 3

கிழக்குப் பாகிஸ்தானில் வீசிய பயங்கர சூறாவளியினுல் இரண்டு தீவுகளில் 150 பேர் மாண்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் ஏன்பது சத விகித வீடுகள் அழிந்துவிட்டன.

## ஒருநாள் சம்பளம்

யாழ்ப்பாணம், செவ்.

ஒருமாதம் ஒழுங்காக வேலைக்குவரும் பஸ் ஊழியர்களுக்கு சன்மானம் வழங்கப்படவிருக்கிறது அந்தச் சன்மானம் ஒருநாள் சம்பளந்தான்.

இலங்கை போக்குவரத்து சபை யாழ். கிழக்குடிப்போ, இந்த அறிவித்தலை ஊழியர் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தொண்டு என்பதென்ன? சமயப்பணி மட்டு மன்று. தெருக் கூட்டுவதும் பல்வேறு வேலைகளும் கூட தொண்டுதான். நாம் பெறுவதைவிட கொடுப்பதில் அதிக ஆர்வம் காட்டும்போது, சம்பளத்தை விடச் சேவையை முக்கியமாகக் கருதும்போது அன்புடனே எந்த வேலையையும் செய்யும்போது அது தொண்டாகி நமக்கு இன்பமளிக்கின்றது.

—ரஸல் பிரானிவலிட்

ஈழநாடு

EELANADU National Tamil Daily; Post Box [illegible] JAFFNA.

Telegrams : EELANADU Jaffna; Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி மீ 18உ (4-10-66)

## ஏன் அவசரம்?

தேசிய நெருக்கடி உருவாகிக்கொண்டு இருக்கிறது. இந்த நெருக்கடியைத் தவிர்த்து தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தையும்பொறுப்பையும்நேற்று இதே பகுதியில் எடுத்துக் காட்டியிருந்தோம்.

பல வருடங்களாகச் சீர்குலைந்திருந்த தேசிய ஐக்கியத்தை மீண்டும் உருவாக்க முயற்சிசெய்து பெரும் சிரமத்தின்மீது தேசிய ஐக்கியம் உருவாகிவருகின்ற சமயம் இது. இச்சமயத்தில் தீவிர கருத்துவேற்றுமைக்கான காரியங்களைச் செய்வது, தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்த முடியாது. தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்கு அல்லும் பகலும் உழைத்துவரும் பிரதமமந்திரியைச் சங்கடத்தில் ஆழ்த்துவதாகும். இதுதவிர 'வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல்பொரி கிடைத்த மாதிரி' அரசாங்கத்தைப் பற்றிப் பிரசாரஞ்செய்ய வகுப்புவாதிகளுக்கு அதுவும் உப-தேர்தல் சமயத்தில் நல்ல வாய்ப்பளிப்பதுமாகும்.

வடக்கு கிழக்கு மாகாண மக்கள் சிங்களம் படிக்க விரும்பாதவர்களல்லர். 1956ம் ஆண்டுக்கு முன்னர் இப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் பலவற்றிலும் சிங்களம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்பட்டு வந்தது. அவர்கள் தாமாக விரும்பிப் படித்தனர். இப்பொழுதும் அவர்கள் விரும்பிப் படிக்கத் தயாராக இருக்கின்றனர். ஆனால் சகோதர மொழியாக, மானத்தை இழக்காமல் கற்க விரும்புகின்றனர். இதற்கு 1956ம் வருடத்துக்கு முன்னிருந்த நிலையை ஏற்படுத்துவதே காலச் சிறந்தது. அதாவது சிங்கள மக்களும் தமிழ் மொழியைப் படிக்கக் கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இவ்விதவசதியும்ஏற்பாடும் செய்யாதவரை சிங்கள ஆசிரியர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவது பிள்ளைகளின் போதனை மொழி தாய்மொழியாக இல்லாமற் செய்வதும் நெருக்கடியை ஏற்படுத்தி ஐக்கியத்தை குலைப்பதாகவே இருக்கும்.

இன்று எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது தேசிய ஐக்கியம்தான். எனவே தேசிய ஐக்கியத்தைப் பாதிக்கக் கூடிய சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் பிரச்னையையோ, பிள்ளைகளின் போதனை மொழியைத் தெரிவுசெய்யும் உரிமைப் பிரச்னையையோ இப்பொழுது அவசர அவசரமாகக் கொண்டு வரவேண்டுமா? வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை, உணவு உற்பத்தி, பொருளாதாரப் பிரச்னை போன்ற பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வுகாணவேண்டி இருக்க ஐக்கியத்துக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய இந்த இரு பிரச்னைகளுக்கும் என்ன அவசரம்? எனவே இன்று அரசாங்கத்தையும், நாட்டையும், மக்களையும் எதிர்நோக்கும் பெரும் தேசிய நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு ஆளுங்கட்சியில் உள்ள அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். இதே சமயம் சர்ச்சைக்குரிய விஷயங்களை அவசரப்பட்டுக் கொண்டுவராமல் சிறிது காலத்துக்கு ஒத்தி வைக்கப் பிரதமர் முன்வரவேண்டும். இதுவே அரசியல் விவேகமும் தேசாபிமானமுமாகும்.

## மா-சே-துங் படத்துக்கு கியூ

பீகிங், அக். 3

மா-சே-துங்கின் படத்தை வாங்குவதற்கு நேற்று முன்தினம் இரவுமுழுவதும் சீன மக்கள் கண்விழித்து கியூவில் நின்றதாக அறிவிக்கப்பட்டது.

# ஐயாறன் எழுதுவது

சிலகாலத்துக்குமுன் இங்கு ஓர் அன்பர் தீவிர நாத்திகம்பேசிக்கொண்டிருந்தார். அவர் இப்போது ஆஸ்திகராகி தவறாமல் கோவிலுக்குச்சென்று பக்தியுடன் கும்பிடுவதாயும், இவ்விதம் பலர் மனம்மாறி இருப்பதாயும் ஓர் அன்பர் வந்து தெரிவித்தார்.

ஈழத்திலே ஒரு விசேஷம் என்னவென்றால், தீவிர மார்க்ஸியவாதத்தை வெளியில் பேசினாலும், அவர்கள் வீட்டுச் சூழ்நிலை நாத்திகத்துக்கு இடமளிக்காது. வீட்டரசிகள் தெய்வநம்பிக்கையில் ஊறியவர்கள். ஆண்கள் சிறிது காலம் கோணல் வழிகளில் சென்றாலும், பெண்கள் தமிழ்ப் பண்பிலும் தெய்வ நம்பிக்கையிலும் ஆழ்ந்திருப்பதால், ஆண்களை எப்படியோ திருத்தி ஆஸ்திகராக்கிவிடுகிறார்கள். நமது மங்கையர்க்கரசிகள் வாழ்க!

ஃ ஃ ஃ

இங்கு ஒரு கல்லூரி அதிபர் இடதுசாரிப்பக்கம் திரும்பியவர். ஆனாலும் தம் கல்லூரியில் சரஸ்வதி பூசை முதலிய சமய வழிபாடுகள் நடத்தி, தாமும் மாணவர்களுடன் அதில் கலந்து கொண்டு, விபூதி, பிரசாதம் பெற்று அணிபவர்.

சமீபத்தில் அவர் தமது அருமைப் புதல்விக்கு விவாகம் நடத்தினார். அழைப்பிதழிலேயே, தேவாரப்பாடல்கள் இடம்பெற்றிருந்தன. குருக்கள்மார்கள் வந்திருந்து குடும்பப்பரம்பரை வழக்கப்படி விவாகத்தை நடத்தி வைத்தனர். சம்பிரதாய பழக்கவழக்கப்படியே விவாகத்தைநடத்தவேண்டுமென பதில் அவர் அதிக ஊக்கம் காட்டினார்.

ஈழத்திலே எதிர்காலத்தில் கம்யூனிஸ ஆட்சி வந்தாலும்கூட அது நமது பரம்பரைப் பண்பாட்டுக்கமைய, ஆஸ்திகத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்ற நம்பிக்கை ஏற்படுவதாக இருந்தது.

ஃ ஃ ஃ

கடவுளைப்பற்றி கம்யூனிஸ்டுகளின் கருத்து என்னவாயினும், கடவுளுக்கு கம்யூனிஸ்டுகள் மீது எவ்வித வெறுப்போ, கோபமோ இருக்கமுடியாது. ஏனெனில் அவனன்றி ஓரணுவும் அசையாதல்லவா? கம்யூனிஸ்டுகளின் உள்ளிருந்து இயக்குபவரும் அதே தெய்வம் தானே!

கடவுளே ஒரு பெரிய லட்சிய கம்யூனிஸ்ட் என்று கூறுவாருண்டு. பலாத்கார முறையைத்தவிர கம்யூனிஸத்தின்நோக்கத்தை மகாத்மா காந்தியும் ஆதரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

ஆனால் பீகிங்குக்கும் மாஸ்கோவுக்கும் அதிக மனஸ்தாபங்கள் ஏற்பட்டு அவர்களுக்குள்ளேயே இப்போது பூசல்கள் அதிகரித்து வருவதைப் பார்க்கின்றோம். இன்றுள்ள நிலையில், பீகிங்கின் கோபம் வாஷிங்டன் மீதுள்ளதை விட மாஸ்கோ மீதுதான் அதிகமாகவுள்ளதாயும், மாஸ்கோவை எதிர்க்க, அமெரிக்காவுடன் சமரசம் செய்துகொள்ளவும் சீனம் தயாராக இருக்கலாமென்றும் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையில் ஓர் அரசியல் நிருபர் எழுதியிருந்தார்.

சீன தேசிய விழாவுக்காக அழைப்பின்மீது பீகிங்சென்றிருந்த ரஷ்ய உதவிப் பிரதமர் முதலியவர்களை, அந்த விழாவில் சீனத்தலைவர் ஒருவர் கண்டித்துப் பேசியதால், ரஷ்யர்கள் அக்கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. இந்நிலையில் ரஷ்யாவுக்கும் சீனத்துக்கும் மீண்டும் நட்பு எப்படி, யார் மூலம் ஏற்படப்போகிறது?

இரு நாடுகளும் மார்க்ஸிஸக் கொள்கைகளை ஆதரிப்பதாகத்தான் கூறுகின்றன. ஆனால் அவர்களுக்குள்ளாகவே எவ்வளவு பிணக்கு!

அன்பு அன்பை வளர்க்கும். வெறுப்பும் துவேஷமும் பலாத்காரமும் அதைத்தான் பரப்புவதாக இருக்குமென்பதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

ஆனாலும் அன்பு வழியைப் நம்மில் எவ்வளவுபேர் பின்பற்றமுடிகிறது? நம் எதிரிகள் மீதும் நமக்கு அன்பு சுரக்குமா? எவ்வளவு கஷ்டம்! இவ்வித மனப்பண்பு ஏற்படத்தான் நாம் இறை அருளை நாடவேண்டியுள்ளது. அன்புமயமான இறைவன் அருளின்றி நமக்குப்பரிபூரண அன்பு வேறு எப்படி ஏற்படமுடியும்?

ஃ ஃ ஃ

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம், பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான், தாழாதறஞ் செய்மின் தடங்கண்ணான் மலரோனும், கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரமெனீரே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

## கோட்டிலிங்கராசா

சங்கானை, திங்கள்

அச்சுவேலியில் உள்ள பாலியக்குற்றவாளிகளின் சீர்திருத்தநிலையத்திலிருந்து தப்பி ஓடிச்சிலகாலமாகத் தலைமறைவாக இருந்த கனகரத்தினம் மகாராசா என்பவரை சங்கானைக் கிராம சேவையாளருக்குக் கிடைத்த தகவலின் பேரில் சங்கானைப் பொலிசார், கிராமசேவையாளர் திரு.எ. வேதநாயகம் உதவியுடன் நவாலியில் வைத்துக்கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

மகாராசாவை கைது செய்யத்தகவல் கொடுப்போருக்கு சன்மானம் கொடுப்பதாக அரசினர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# ஓடும் ரயிலில்....!

பிரயாணம் என்பது எவ்வளவோ களைப்பை ஏற்படுத்தக்கூடியதொரு விஷயம். ஆனால் அனுபவிக்கப்பட வேண்டிய ஓர் அனுபவம் என அதைக் கருதும்போது களைப்பு சற்றுக்குறையத்தான்செய்கிறது. நாம் எந்த வாகனத்தில் பிரயாணத்தை மேற்கொள்கின்றோமோ அந்த வாகனத்தினுள் நடக்கும் விஷயங்களைப்பார்த்துக் கொண்டிருக்கும்போது நம்மைப்பற்றி நாம் சிறிது மறந்துவிடத்தான் செய்கின்றோம். இவ்வித பிரயாணத்தின்போது நல்ல அனுபவமும்ஏற்படுகிறது. கசப்பான அனுபவமும் ஏற்படுகிறது.

சமீபத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புசென்றுகொண்டிருந்தபோது ரயிலில் ஏற்பட்ட அனுபவங்கள்தான் எழுதுவதற்கு விஷயங்களை சேகரித்துத்தந்தது. ரயிலைசிலர் பிரயாணத்துக்கு மட்டுமல்ல வேறு எத்தனைக்கோ எல்லாம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது சேகரிக்கப்பட்ட அனுபவங்களில் ஒன்று.

பிரயாணக் களைப்பு சற்று தூக்கத்தைக் கொண்டுவந்தது. காலை எட்டு மணிக்கே தூங்கவிரும்பாமல் முகத்தைகழுவிக்கொள்ள ரயில் பெட்டியுள் நீர் இருக்கும் இடத்துக்குச் சென்றபோது அங்கு பேசின் இருந்தது. ஆனால் நீரைக்கொண்டுவருவதற்கான அந்த அழுத்தும் கருவியையாரோ தமது வீட்டில் நீர்மொள்ளுவதற்காகக் கொண்டு சென்றுவிட்டிருந்தார்கள். ஏமாற்றமடைந்த எனது முகத்தில் எத்தனை சுருக்கங்கள் விழுந்திருக்கின்றன என்பதை அறிய ஆவலாக பேசினுக்கு மேலே பொருத்தப்பட்டிருக்கும் முகம்பார்க்கும் கண்ணாடியைப் பார்த்தேன். அங்கு அது இல்லை. யாருடைய கை அந்த வேலையை நுட்பமாகச் செய்திருந்ததோ தெரியவில்லை. மலசலகூடம் என்று எழுதப்பட்டிருக்கும் இந்தச் சின்ன அறையுள் எத்தனையோ கண்கட்டி மந்திரவேலைகள் சட்டத்தின் கண்களுக்குத்தெரியாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல முன்னர் இல்லாத புதிய சித்திரவேலைகளையும் சில சித்திரப்பிறவிகள் கையில் கிடைத்த கருவிகளால் கீறிவிட்டிருக்கிறார்கள். வெளிப்படையாகச் சொன்னால் தாம்பத்திய உறவை சித்தரிக்கும் படங்கள்தான் இவை. இவை சம்பந்தப்பட்டவர்களது கண்களுக்கும்பட்டு இந்த ஓவியர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத்தகுந்த 'சன்மானம்' வழங்க ஏற்ற நடவடிக்கை எடுத்தால் சமூகத்துக்கே அதனால் மிக்க நன்மை ஏற்படும் என்ற எண்ணத்தினால் தான் இதனை இங்கு வெளியிடவேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ரயிலில் மதுபானத்தை ஒழிக்கவேணடுமென பலர் உரத்துக்கத்தி வருவதை நாம் கேட்கின்றோம். இது இந்தரயில்களில் பிரயாணம் செய்யும் சிலருக்குக் கேட்பதாகத்தெரியவில்லை. வளர்ந்த மனிதர்களாக செல்லும் சிலர் மது அருந்தியதும் குழந்தைப்பிள்ளைகளாக மாறிவிடும் காட்சி மிகவேடிக்கையாகவே இருக்கிறது. ரயில்வண்டியினுள் இருக்கும் சின்ன வழியால் இவர்கள் [illegible] 'மழலை' பேசுவது பெண்களைக்கண்டதும் மடியில் சரிய எண்ணுவது இதெல்லாம் அனுபவிக்கவேண்டிய அருமையான காட்சிகள்? மது அருந்துவதே இதற்காகத்தான் என்பதை அறியாதவர்கள் தான் ரயில்பெட்டியுள் மதுவிலக்கைப்பற்றிப் பேசுகிறார்கள். அரசாங்கம் இந்தக் 'கண்காட்சி' மூலம் பணம் தேடுவதைவிட வேறு வழிகளிலும் தேடலாம்.

வளமான நமது நாட்டில் வாழ்வதற்கு முடியாமல் பலர் திரிகிறார்கள் என்பதை நமது ரயில்களில் இப்போது தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது. கதிர்காமம்போன்ற புண்ணிய சேத்திரங்களுக்கு சென்றுதான் தானதர்மம் செய்யவேண்டும் என்ற அவசியத்தை இப்போது நமது நாட்டு ரயில் பிரயாணம் அறவே நீக்கிவருகிறது எனலாம். கைஇழந்தவர்கள், கால் இழந்தவர்கள், பிள்ளைகளைப் பெற்று வளர்க்கமுடியாதவர்கள் இப்படி எத்தனையோ அபலைகள் ரயில் பிரயாணிகளிடம் அபயம்தேடி அலைகிறார்கள்,

வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை 'வாருங்கள் வாருங்கள்' எனக் கூவி அழைக்கின்றோம் இங்கு வரும் அவர்கள் வேறுஇடங்களுக்கு செல்வதைவிட நம் ரயில்களில் பிரயாணம் செய்துபார்த்தால் இங்கிருந்து தமது ஊருக்கு உடனே ரயில் மூலமாக செல்லவே ஆசைப்படுவார்கள் என்பது நிச்சயம். அதுமட்டுமல்ல நமக்கு எவ்வளவு கடனுதவி தேவை என்பதையும் கணித்துச்சென்று தமது நாடுகளில் எடுத்துச்சொல்வார்கள் என்றும் எதிர்பார்க்கலாமல்லவா?

—கணேஷ்

## தாலி களவு

### பொலிசில் புகார்

சங்கானை, திங்கள்

சங்கானை மேற்கு வடலியடைப்பிலுள்ள பூம்பத்தை என்னும் ஒழுங்கைபால் வரும் போது 750/- பெறுமதியான தனது தாலிக் கொடியை இனந்தெரியாத நபர் ஒருவர் திடீர் என அறுத்துக் கொண்டு ஓடிவிட்டதாக அதே ஊரைச் சேர்ந்த மீன் வியாபாரியான இராமன் மனைவி வைராகி பொலிசில் புகார் செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து சங்கானைப் பொலிசார் தலைமறைவாக உள்ள நபரைக் தேடிவருகின்றனர்.

## தமிழிலும் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வர்த்தக தராதரப்பத்திர பரீட்சை இம்முறை முதல் முறையாக தமிழ்மொழியில் நடாத்தப்படவிருக்கின்றது. இப்பரீட்சை 1956-ம் வருடத்திலிருந்து தனிச் சிங்கள மொழியில் மட்டும்நடத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. ஆப்பரீட்சை யாழ்ப்பாணம் தொழில் நுட்பப் பாடசாலையினால் நடாத்தப்படும் பரீட்சைக்கு சமமாகும், இப்பரீட்சை தமிழ் மொழியில் நடாத்தப்பட வேண்டும் என அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றம் நீண்டகாலமாகக் கோரி வந்ததற்குத்தொடர்ந்தே இத்தவித நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்!

## தென்வியட்னாமில் நடந்த கடும் சண்டையில்

சைகோன், அக். 3
தென்வியட்னாமில் அமெரிக்க துருப்புகளுக்கும், வடவியட்னாம் துருப்புகள், வியட்காங்கியருக்கிடையே நேற்று நடைபெற்ற கடும் சண்டையில் நூறு வடவியட்னாம் துருப்புகள், வியட்காங்கியர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சைகோனுக்கு வடக்கே சில மைல் தூரத்தில் இந்தப் பயங்கரமோதல் இடம்பெற்றது. 3ஹாலி ஹெலிகொப்டர் விமானத்திலிருந்து அமெரிக்க துருப்புகள் குண்டுகளைப் பொழிந்ததாகவும், வடவியட்னாம் துருப்புகளும் வியட்காங்கியரும் விடாது எதிர்த்தாக்குதல் நடாத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் நடைபெற்ற கடும் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கத் துருப்புக்கள் இப்பகுதியைச் சுற்றிவளைத்து வியட்காங்கியர்களை எங்குமே ஓடவிடாது கவனித்துக்கொண்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

### 11 பிக்குகள் விடுதலை

இவ்வருடம் ஜூன் மாதம் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டம் நடாத்தியதாக குற்றஞ்சாட்டிசிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பிக்குகளில் பதினொருபேரை நேற்று தென்வியட்னாம் அரசாங்கம் விடுதலைசெய்துள்ளது. மிகுதி எஞ்சியிருக்கும் பிக்குகள் விரைவில் விடுதலைசெய்யப்படுவார்களென தென்வியட்னாம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

கிரிப்பொலி!

# சுபந்திரியோவின் பதில் கேட்டு

சிங்கப்பூர், அக். 3
சிங்கப்பூர், இந்தோனேஷியாவில் கடந்த வருடம் நிகழ்ந்த கம்யூனிஸ்ட் ராணுவச் சதித்திட்டத்தில் பங்குபற்றிய குற்றத்துக்காக ராணுவக் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு வரும் இந்தோனேஷிய முன்னாள் வெளிவிவகார மந்திரியும், உதவிப் பிரதமருமான டாக்டர் சுபந்திரியோ, இந்தோனேஷியாவுக்கு எதிராக பிரிட்டிஷ் - அமெரிக்கக்கூட்டுச் சதி ஒன்றிருப்பதாகத் தமக்கு அப்போதைய பிரிட்டிஷ் தூதுவர், ஓர் அனுமதேயக் கடிதம் எழுதியதாகத் தாம் எண்ணியிருப்பதாகத் தெரிவித்தார்.

அண்மையில் மாணவர்களால் தாக்கப்பட்ட பிரிட்டிஷ் தூதராலயத்தைச் சேர்ந்த, ஜாகர்த்தாவின் முன்னர் பிரிட்டிஷ் தூதுவராக இருந்த திரு. அண்ட்ரு கில்கிறைஸ்ட் தான் இக்கடிதத்தை எழுதியதாகத் தாம் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'இந்தக் கதையை ஜனாதிபதி சுகர்னோ அப்படியே விழுங்கிவிட்டாரோ'? என்று நீதிபதி டாக்டர் சுபந்திரியோவைக் கேட்டார். அவர் 'ஆம்' என்று பதிலளித்தார். இதைக்கேட்டதும் கோர்ட்டில் இருந்த அனைவரும் 'கொல்'லென்று சிரித்தனர்.

வழக்குத் தொடர்ந்து நடைபெறுகிறது.
((பி. டி. ஸி)

# வடநைஜீரியாவில் 300 பேர் கொல்லப்பட்டனர்

## நிலைமை மோசமடைகிறது

ஹாஸே, அக். 3
வட நைஜீரியாவி நேற்று நடைபெற்ற பயங்கரக் கலவரமொன்றில் முன்னூறு பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

வட நைஜீரியாவில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கோஷ்டியொன்றுக்கும், ராணுவத்தினருக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றதாகவும், இதனைத் தொடர்ந்து இருபக்கத்திலும் உயிர்ச்சேதம் மாறிமாறி ஏற்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஹாஸே விமான நிலையத்தைத் தாக்குவதிலும் இந்தக் கோஷ்டி முனைந்தபோது, ராணுவம் அங்கும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும், இதன் விளைவாகப் பலர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவில் வடக்கில் வாழ்வோருக்கும் கிழக்கில் வாழ்வோருக்குமிடையே ஏற்பட்ட இனக் கலவரத்தைத் தொடர்ந்தே இங்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இருதினங்களுக்கு முன்னர் வட நைஜீரியாவில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அதனை மீறுபவர்களைச் சுட்டுத் தள்ளும்படி உத்தரவிடப்பட்டிருந்தது.

கோரப்புயல், கடல் கொந்தளிப்பு

# கி. பாகிஸ்தானில் லட்சம் பேர் பாதிப்பு

டாக்கா, அக். 3
கிழக்குப்பாகிஸ்தானில் வீசிய சுழல் காற்றினாலும் கடல் கொந்தளிப்பினாலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிட்டகாங் துறைமுகத்தில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பினால் துறைமுகத்தின் அரைவாசிப்பகுதி நீரில் மூழ்கிவிட்டதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாரதத்தில் மாணவர் கிளர்ச்சி

## பிரச்னையை ஆராய திரு. நந்தா பொலிஸ் அதிகாரிகளை சந்திக்கிறார்

புதுடில்லி, அக். 3
இந்தியாவில் மாணவர் பலாத்காரம் அதிகரித்திருப்பதுபற்றி விவாதிக்க இந்திய உள்துறை அமைச்சர் திரு. குல்சாரிலால்நந்தா உடனடியாக அகிலஇந்தியாவிலுமுள்ள பொலிஸ் தலைமை அதிகாரிகளை ஒரு கூட்டத்துக்கு அழைத்திருப்பதாக இங்கு அறிவித்துள்ளார்.

ஒருவார காலமாக வட இந்திய நகர்களில் மாணவர்கள் பெரும்பாலும்வெகு சிறிய காரணங்களுக்காக கிளர்ச்சி செய்தும், பொலிசாரைத் தாக்கியும், வகுப்புக்களைப் பகிஷ்கரித்தும், கார்களை எரித்தும், வீடுகளைக் கொள்ளையடித்தும் பல பலாத்கார ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவந்ததைத் தொடர்ந்தே திரு. நந்தாவின் இந்த அறிவித்தல் வந்துள்ளது.

மாணவர் தொந்தரவு பெரிய பிரச்னையாக வளர்ந்துவிட்டதெனவும், அதைப் பெருமளவில் நடவடிக்கை எடுப்பதன்மூலம் தீர்த்துவைக்க வேண்டுமென்றும் திரு. நந்தா காங்கிரஸ் பார்லிமெண்ட் அங்கத்தவர்களுக்குக் கூறியுள்ளார்.

மாணவர் கிளர்ச்சிபற்றிய சட்டஒழுங்குப் பிரச்னைகளை ஆராயவும், கிளர்ச்சிகளைப் புகார்களுக்கு இடமளிக்காதவகையில் சமாளிப்பது பற்றியும் ஆராயத் தாம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்களின் கமிட்டி ஒன்றை உடனடியாகக் கூட்டத் தீர்மானித்திருப்பதாகவும் உள்துறை மந்திரி திரு. நந்தா மேலும் தெரிவித்துள்ளார். (பி டி ஸி)

# முத்தரப்பு மகாநாடு

நியூயோர்க் அக் 3
புதுடில்லியில் நடைபெறவிருக்கும் முத்தரப்பு மகாநாடு குறித்து நியூயோர்க்கில் ஐக்கிய அரபுக் குடியரசு, யூகோஸ்லேவியா, பாரத வெளியுறவு மந்திரி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இம்மாதம் 23ம் தேதி புதுடில்லியில் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாசர், யூகோஸ்லேவியா அதிபர் டிட்டோ, பாரதப்பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி ஆகியவர்களிடையே இந்த முத்தரப்பு மகாநாடு நடைபெறும்.

# பொதுமக்கள் கஷ்டம்

முல்லைத்தீவு, திங்கள்
முல்லைத்தீவுப் பட்டின சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் பொது நூல் நிலையம் கிழமையில் ஒன்றரை நாட்கள் மூடப்பட்டு வருவதால் பொதுமக்கள் பத்திரிகைகளைப் பார்வையிட முடியாது கஷ்டமடைகின்றனர்.

# குழந்தைப் பேற்றுக்கு மருந்து சாப்பிட்ட இளம் பெண்

## ஒரே சூலில் 7 குழந்தைகள் பெற்று எல்லாம் இழந்தாள்

பொஸ்டன், அக். 3
குழந்தைப் பேற்றுக்கு மருந்து சாப்பிட்டுவந்த இளம்பெண் ஒருத்தி இங்கு உரிய காலத்துக்கு முன்னதாக ஏழு குழந்தைகளைப் பெற்றெடுத்தாள்.

திருமதி வில்லியம் சுவிக்கி பெல்லெக் (23) என்ற இப்பெண்மணிக்கு நான்கு பெண்குழந்தைகளும் மூன்று ஆண் குழந்தைகளும் நான்கு மாதங்கள் முன்னதாகவே பிறந்தன. இவர்களுடைய நிறை 9 தொடக்கம் 15 அவுன்ஸ்வரை இருந்தது. எல்லாக் குழந்தைகளும் பரிபூரணமான உருவைக் கொண்டிருந்தன.

முதலாவது குழந்தை வீட்டிலேயே பிறந்தது. மற்ற ஆறும் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்து 30 நிமிடங்களில் பிறந்தன.

ஒரு குழந்தை செத்துப் பிறந்ததாகவும் மற்ற ஆறு குழந்தைகளும் பிறந்து சற்று நேரத்தில் காலமாகினவென்றும் ஆஸ்பத்திரி நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.
(பி டி ஸி)

# பாகிஸ்தான் பத்திரிகையாளர் சீனு வந்தனர்

பீகிங், அக். 3
பாகிஸ்தானைச் சேர்ந்த நான்கு பத்திரிகையாளர்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளனர். சீன பத்திரிகையாளர் சங்கத்தின் அழைப்பை ஏற்று மூவர்கள் இங்கு வந்திருக்கின்றனர்.

# நால்குவருடம் சிறை

## ஜீவனாம்சம் கட்டத்தவறியவருக்கு

ஊர்காவற்றுறை, திங்கள்
காரைநகர் மேற்கு வாசியான சண்முகம் சின்னையா என்பவர் அவரது மனைவிக்கு நான்கு மாதம் ஜீவனாம்சப் பணம் கட்டத்தவறியதைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை மாஜிஸ்திரேட் திரு. வி. ஜே. இராசரத்தினம் நான்கு மாதம் [illegible] சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# தமிழ் நாட்டுச் செய்திகள்

## "மந்திரி மஜீதை தோற்கடிக்கமுடியாது" —காமராஜர்

மந்திரி மஜீதை யாராலும் தோற்கடிக்க முடியாது என்று காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜர் கூறினார். வருகிற தேர்தலில் மந்திரி மஜீதை தோற்கடிப்பேன் என்று தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை விடுத்த சவாலுக்குத் திரு. காமராஜர் இப்படியாகப் பதில் கூறியுள்ளார். அண்ணாதுரை எத்தனை கட்சியுடன் வேண்டுமானால் கூட்டுச் சேரட்டும் ஆனால் காங்கிரஸை தோற்கடிக்கமுடியாதென்று காமராஜர் நெல்லை மாவட்டத்தில் நடந்த கூட்டமொன்றில் கூறினார்.

ஃ ஃ ஃ

### சர்வகட்சிப் போராட்டம்

தஞ்சை மாவட்டத்தில் சர்வகட்சிப் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. தி.மு.க. உட்பட சேர்ந்த சட்டசபை மெம்பர்கள் உட்பட 250 பேர் உண்ணாவிரதம் நடத்தினார்கள். உணவுப் பற்றுக் குறையை எதிர்த்தும் அரிசி ரேஷனை அதிகரிக்கும்படி கோரியுமே எதிர்க்கட்சிகள் இப்போராட்டத்தை நடாத்துகின்றன. கலெக்டர் ஆபீஸ், உதவிக் கலெக்டர் ஆபீஸ், தாலுகா ஆபீஸ்கள் முன் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருப்பதற்கு முன்னால் எல்லா இடங்களிலும் ஊர்வலங்கள் நடந்தன.

ஃ ஃ ஃ

### சென்னையில் பெருமழை

சென்னையில் இடைவிடாத பெருமழை பெய்தது. கடந்த மூன்று தினங்களாக இந்த மழையினால் நூற்றுக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தனுஷ்கோடிக்கு வடக்கே உருவான புயல் வடக்கே நகர்ந்து கடலூருக்குக் கிழக்கே மையம்கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

### பக்தவத்சலத்தின் 65-வது கலை

''ஆயகலைகள் 65 என்பார்கள். ஆனால் 65வது கலையாக இன்னொரு கலையை பக்தவத்சலம் அறிமுகப்படுத்தியிருக்கிறார். எதிர்க்கட்சியினர்மீது அநியாயப் பழிகளைப் போடுவதுதான் அந்த 65வது கலையாகும் என்று சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தி. மு. க. தலைவர்களில் ஒருவரான கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.

ஊர்காவற்றுறை, திங்கள்
உள்நாட்டு அமைச்சின் 1000 தறித்திட்டத்தின்படி நாரந்தனையில் ஓர் நெசவு நிலையம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான மண்டபம் அமைக்கப்பட்டுவிட்டது.

# தமிழ்நாட்டு தியாகிகளுக்கு மாதம் ரூ. 50 பென்ஷன்

## முதல்மந்திரி பக்தவத்சலம் அறிவிப்பு

காரைக்குடி, அக். 3
தமிழ் நாட்டில் விடுதலை போராட்டத்தில் கலந்துகொண்டு அநாதரவான நிலையிலுள்ள தியாகிகளுக்கு மாதம் 50 ரூபாய் பென்ஷன் வழங்கும் திட்டத்தை நேற்று தமிழ் நாடு முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் இங்கு அறிவித்தார்.

காரைக் குடியில் நடந்த காந்தி ஜெயந்தி விழாவில் முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் பேசினார். 'மாதம் நூறு ரூபாய்க்குக் குறைவாக வருமானம் பெறும் விடுதலைப் போராட்டத்தில் [illegible] க்கு மாதம் ஐம்பது ரூபா 50 பென்ஷன் வழங்கப்படும். அவர்கள் மூன்று மாதமாவது சிறையிலிருந்திருக்க வேண்டும்'' என்று மந்திரி கூறினார்.

மந்திரி பக்தவத்சலம் மேலும் பேசுகையில், மகாத்மாகாந்தியின் அஹிம்சை, தன்னலமற்ற சேவை, தொண்டு, சுதந்திரப் போராட்டம் ஆகியவற்றை நினைவுபடுத்தினார்.

''மக்கள் மனதில் தூய்மை இருக்க வேண்டும். காந்தியின் தத்துவங்களும் இது தான். அவர் வழியில் செல்வதுதான் நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்'' என்று மந்திரி பக்தவத்சலம் கூறினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சைவ நல்லடியார் வாழ்வில் வீடும் வேண்டா விறலினை காண்கின்றோம்

## சுழிபுரம் சேக்கிழார் விழாவில் பேராசிரியர் ஞானசம்பந்தன்

சுழிபுரம், திங்கள்
''சைவ நல்லடியார் இலட்சிய வாழ்வு வாழ்ந்தவர். அவர் வரலாற்றிலே வீடும் வேண்டா பிறவினை நன்கு காண்கின்றோம், ஆண்டவன் அருள் அரிதும் பெரிதுமாய்க் கிடைக்கின்றது. சிலர் அவன் அருளைப் பெறுகின்றனர். சிலர் சிறுகப் பெறுகின்றனர். அறிவு முதிர்ந்த நிலையில் துன்பமும் இன்பமும் ஒன்றுகத்தோன்றும் அடியாரால் இந்த நிலையாணக் கூடியதாக இருக்கின்றது.''

இவ்வாறு வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புப் பேருரையில் 'சேக்கிழார் காட்டிய செந்நெறி' என்னும் பொருள் பற்றிப் பேசிய பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் குறிப்பிட்டார். விழாவுக்கு வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் பி. ஏ. தலைமைவகித்தார் திரு. க. சண்முகரத்தின சர்மா வரவேற்புரை, நன்றியுரை கூறினர்.

திரு. அ. ச. ஞானசம்பந்தன் தொடர்ந்து பேசியதாவது: ''மருத்துவன் அறுவை வைத்தியம் செய்யும்போது மரணம் சம்பவித்தாலும் அவனை இகழ்வதில்லை. சிறுகக் கத்தியால் குத்தியவனை இகழ்கின்றோம் அது போலவே அறிஞர் இறைவன் துன்பம் செய்தாலும் அதனை வெறுக்காது அவனைப் பணிகின்றனர்.

நாம் இடர் வந்தாலும் தளர்ச்சிவந்தாலும் இறைவனை மறவாது வாழவேண்டும் எடுத்த இலட்சியமே பெரிது, உயிர் பெரிதல்ல.

இறைவன் நாமத்தைக் கேட்டு அவன்இருக்கும்வண்ணம் தெரிந்து அகங்கார மமகாரங்களை நீக்கி அவன் மீது பித்துக் கொண்டு வாழவேண்டும். பெரியபுராணம் ஒப்புயர் வற்றது சேக்கிழார் புலவருட்புலவர் சிறந்தசட்ட அறிஞர் நம் பெரிய புராணத்தைக் கற்று உய்வு அடைதல் வேண்டும்.

சுழிபுரம் இந்து சமய விருத்திச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ் விழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தனின்பேச்சுக் கேட்டு இன்புற்றனர்.

## பொலிஸார் மீதான புகார்

### விசாரணை ஆரம்பம்

திருநெல்வேலி, திங்கள்
யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் அண்மையில் தனது குழந்தை ஒன்றைப் பார்க்கச் சென்றபோது டாக்டர் ஒருவரால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் பொலிசாரால் தாக்கப்பட்டதாக அனுராதபுரத்தில் கடமையாற்றும் அரசாங்க ஊழியர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன்ட், உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன்ட் வைத்திய அதிகாரி ஆகியோருக்குச் செய்துள்ள புகார் சம்பந்தமாக நேற்று விசாரணை ஆரம்பமாகியது.

நேற்றையதினம், தாக்கப்பட்டதாகப் புகார் செய்துள்ள அரசாங்க ஊழியரும் அவருடன் கைது செய்யப்பட்டு பிணையில் விடப்பட்ட அவரது நண்பரும் யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சி. தவராசாவினால் விசாரணை செய்யப்பட்டனர்.

இது சம்பந்தப்பட்ட டாக்டரும் யாழ்ப்பாணம் வைத்திய அதிகாரியினால் விசாரணை செய்யப்படுவதாகத் தெரிய வருகின்றது. விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

## தமிழரசு வாலிப முன்னணி குழு

### மட்டக்களப்பில் கூடுகிறது

யாழ்ப்பாணம், திங்கள்
தமிழரசு வாலிபமுன்னணியின் கமிட்டிக்கூட்டம் மட்டக்களப்பில் இம்மாதம் 6-ந் திகதி தலைவர் திரு. செ. இராசதுரை தலைமையில் கூடவிருக்கிறது. இக் கூட்டத்தில் தமிழ் மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவது கல்வி அமைச்சு எடுத்து வரும் நடவடிக்கை சம்பந்தமாக முக்கிய ஆலோசனை செய்யப்படும் எனத் தெரிகிறது.

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை மர ஸ்குறு
ஆணிகளை

நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:-
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழையசோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 7143 — 2029

கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

## இருவகைத் தீமைகள்

சாவகச்சேரி, திங்கள்
இலாபம் இல்லாது பிறருக்குத் துன்பம் செய்வதில் ஒரு திருப்தி ஒருசிலருக்கு உண்டு. அதை அவர்கள் ஒருகலையாகவே கருதுகிறார்கள். ஒருவருக்குத் தீமை செய்து அதனுல் சந்தோஷமடைவது மட்டமான மனப்பான்மை. இதனுல் நாமும் கம்பர் கூறும் கல்போலாகிவிடுவோம்.

மட்டுவில் மகாவித்தியாலயத்தில் வித்துவான் க. நடராசா தலைமையில் நேற்றுக்காலை சிறப்புச் சொற்பொழிவாற்றிய பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார். அவர்மேலும் கூறியதாவது:- தீமைகளில் இரண்டுவகை உண்டு. ஒன்று தீர்மானித்துச் செய்தல்மற்றது எதிர்பாராது செய்தல், நமது மனோபாவத்தைக் கொண்டு எமதுநிலையை அறியும் ஆற்றல் நாய்களுக்கும் உண்டு. மனிதர்கள் தூக்கத்தின்போது அவர்களது மனோபாவம் அவர் பிரதிபலிக்கும்பொருள்ஒன்றாய் இருந்தாலும் அதை இருவிதத்தில் எடைபோடும் மனப்பான்மை மக்களுக்குஉண்டு. இராமரை அயோத்தி மக்கள் போற்றும் அதேசமயத்தில்கூனி தூற்றினுள்.

## யாழ்ப்பாண இலாகாக்கள் பெயர் மாற்றம்

திருநெல்வேலி, ஞாயிறு
யாழ்ப்பாணத்தில் உள்ள சில பிரதான அரசாங்க அலுவலகங்கள் அமைச்சிலிருந்து வந்த ஆணையைத் தொடர்ந்து பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் உள்ளூராட்சி அலுவலகம் என இதுவரை வழங்கப்பட்டு வந்த இவ் அலுவலகம் நேற்று முன்தினம் உள்ளூராட்சி அமைச்சின் யாழ்ப்பாண அலுவலகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று யாழ்ப்பாணம் உதவிக் கல்வி அதிகாரி கந்தோர் என வழங்கப்பட்டு வந்த யாழ்ப்பாணக் கல்விக் கந்தோரும் சமீபத்தில் வடமாநில கல்வி அதிகாரி அலுவலகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இன்னும் சில அரசாங்க அலுவலகங்களும் பெயர் மாற்ற உத்தரவு வந்துள்ளதாக அறியப்படுகின்றது.

## பாராட்டுவிழா

அச்சுவேலி, திங்கள்
திரு. த. சிவலிங்கம் சமாதானநீதிபதியாக நியமனம் பெற்றதையிட்டு பாராட்டு மூகமாக சுன்னுகம் ஐயனார் கோவிலில் பாராட்டுவிழா நடைபெற்றது. விழாவுக்கு அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் தலைமை வகித்தார். பல பேச்சாளர்கள் உரை நிகழ்த்தினர்.

## சாரதி விடுதலை

சாவகச்சேரி திங்கள்
மீசாலை லொறி விபத்து வழக்கை விசாரணை செய்த சாவகச்சேரி மாஜிஸ்ரேட் திரு. ரூபட் சில்வா சாரதி வி. சங்கரநாதன் என்பவரை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்,

இவ் முக்கில் இவ்வருடம் யூன்மாதம் 21-ந் திகதி மீசாலை வடக்கில் ச. புஷ்பதேவி என்னும் சிறுமியை வி. சங்கரநாதன் என்பவர் லொறியால் மோதிக்கொன்றதாகச் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப் பட்டிருந்தது.

எதிர் சார்பில் அட்வகேட் எஸ் ஜெயசிங்கம் புறக்டர் வி. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜராகினர். சாவகச்சேரி பொலிசார் வழக்கை நடத்தினர்.

# 'ஆங்கில இலக்கியங்கள் இங்கு ஆழ வேரூன்றவில்லை'

## யாழ். அமெரிக்க கலாசார நிலையத்தில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், திங்கள்
''இலங்கையில் ஆங்கில மொழி இலக்கியம் தோன்றுவதற்கான அறிகுறி தோன்றியதேயன்றி பூரணத்துவமான நிறைவை அது பெற்றிருக்கவில்லை. ஒரு பக்கத்தே ஆங்கிலப் பண்டிதர்களும் மறுபக்கத்தேசுயமொழி பண்டிதர்களுக்கும் இடையே விளங்கிய பேதம் சுயமொழிகள் புதுயுகத்துக்கேற்ப வளர முடியாமல் செய்ததுடன் அரங்கில் இலக்கியங்கள் இந்நாட்டில் ஆழ வேரூன்ற முடியாமலும் செய்தன.''

இவ்வாறு அண்மையில் இலங்கை அமெரிக்க கலாசார நிலையத்தில் 'தற்கால ஈழத்து இலக்கியமும் அமெரிக்க கற்பனைக் கதைகளும்' என்றதலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் ஆங்கில இலக்கியம் பற்றிப் பேசிய திரு. ஆர். சந்தையா குறிப்பிட்டார்.

சாகித்திய வாரத்தையொட்டி நடைபெற்ற இக் கூட்டத்துக்கு யாழ். மாவட்ட அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா தலைமை தாங்கினர். திரு. சந்தையா தொடர்ந்து பேசியதாவது: ''கானகத்தே கிராமம்'' என்ற திரு வியோனுட்வூல்வ் என்பவரின் கற்பனை ஓர் ஒப்பு உவமையற்றது. இலங்கையில் ஆங்கில இலக்கிய சிருட்டியாளர்களான புண்ணியகாந்தி விஜயநாயக்கா, பற்றிக் பெர்னுன்டோ, அழகு சுப்பிரமணியம் ஆகியோர்களின் ஆக்கசிருட்டிகளில் இயற்கைக் காட்சிகளின் சிறப்பைக் காணலாம். புத்தகங்கள், சினிமா, நாடகங்கள் சம்பந்தமான பத்திரிகை விமர்சனங்களும் வானொலி விமர்சனமும் தரத்தில் உயர்வாக விளங்குகின்றன. விமர்சகவிடையே திரு. ரெஜி சிறிவர்த்தனு கடந்த 20 ஆண்டுகளுக்கதிகமாக ஆங்கில சிங்கள மொழிகளுக்குச் சிறப்பான சேவைசெய்திருக்கிறார் என்றார்.

அடுத்து 'சிங்கள இலக்கியத்தில் அமெரிக்க செல்வாக்கு' என்னும் பொருளில் பேசிய திரு. ஆரிய அபயசிங்கா பேசுகையில், தற்கால சிங்கள இலக்கியத்தில் அமெரிக்க நாடக, சினிமாக்களின் செல்வாக்கு இடம் பெறுகின்றன என்றும் டெனஸி விலியம்சின் நாடகங்கள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு மேடைகளில் அரங்கேற்றப்படுகின்றனவென்றும் பாரம்பரியத்தைத் தகர்க்கின்ற கருத்தே இவ்வித போக்குக்குக் காரணமென்றும் குறிப்பிட்டார்.

தற்கால தமிழ் இலக்கியங்கள் பற்றிப் பேசுகையில், திரு சில்லையூர் செல்வராசன் ஈழத்தவர்களுக்குப் பாரம்பரியத்தில் நம்பிக்கை இடையாதென்று குறிப்பிட்டார்.

'அமெரிக்காவின் நவீன கற்பனைக்கதைகள்' என்னும் தலைப்பில்கொழும்பு அமெரிக்க கலாசார நூல்நிலைய அதிபர் திருமதி மார்க்கிறட் குணரத்ன பேசினர்.

## 75 ரூபா அபராதம்

சாவகச்சேரி, திங்கள்
குஞ்சப்பரந்தனில் வி. செல்லத்துரை என்பவர் தமக்கு உரித்தல்லாத இரு பெரும்பெட்டிகள் வைத்திருந்ததாக கிளிநொச்சிப் பொலிஸ் சார்ஜன் திரு. ரீ. ரத்தினசபாபதியால் கைது செய்து சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ரூபேட் சில்வா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் திரு. ரூபேட் சில்வா எதிரிக்கு 75 ரூபா அபராதம் விதித்தார்.

## மணிலா உச்சி மநாட்டுக்கு வட வியட்னும் கண்டனம்

ஹொங் கொங், ஒக். 3
மணிலாவில் நடைபெறவிருக்கும் ஏழு நாட்டு உச்சி மாநாட்டை ஓர் 'யுத்த மாநாடு' என்று அழைத்த வட வியட்னும் பத்திரிகை ஒன்று, அது தோல்வியையே அணைக்கும் என்று தெரிவித்துள்ளது.

'அமெரிக்க டொலருக்காகத்தம் நாடு மக்களைக் கூலிப்பட்டாளமாக வட வியட்னுமுக்கு அனுப்பி வைத்துள்ள ஐந்து கைக்கூலிகள் சுற்றியிருக்க, தலைமை ஆசனத்தில் யுத்த ஜனதிபதி ஜோன்சன் வீற்றிருக்க நடைபெறும் மாநாடே இந்த மணிலா உச்சிமாநாடு என்றழைக்கப்படும்மாநாடு, என்று அவை விவரித்துள்ளார் அப்பத்திரிகை. என்னதிட்டங்களை அமெரிக்காவகுத்தாலும். அது தோல்வியைத் தவிர்க்க முடியாது என்று கூறியுள்ளது. (பி. டி. வி.)

## வீதிகள் திருத்தம்

சங்கானை, திங்கள்
மானிப்பாய் கிராமசபைக்குட்பட்ட 15-ம் வட்டாரத்திலுள்ள ஐயனார் கோவிலடி ஒழுங்கையும் தேனிப்புளியடி மெயின் வீதியிலிருந்திக்கும் மதவடி ஒழுங்கையும் சிறந்தமுறையில் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. 15-ம் வட்டார அங்கத்தவர் திரு. அ. சதாசிவம் எடுத்தவிடா முயற்சியால் அரசாங்கமன்யம் மான்யம் கிடைத்தது.

## நியமனம்

அச்சுவேலி, திங்கள்
புத்தூர் கிழக்கிலுள்ள வாதரவத்தை பெண்கள் கிராம முன்னேற்றச்சங்கத்திற்கு சமூகநல உத்தியோகத்தராக திருமதி அருந்ததி தேவி கந்தையா கிராம அபிவிருத்தி இலாகாவினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதைச் சுருக்கம்

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

கொள்கிறான். நாடகத்தைப் பார்த்துப் பரபரப்படைந்த அரசன், நாடகம் முடிந்ததும் மண்டபத்தை விட்டு விரைந்தேகுகிறான்.

இதற்குப் பின், கமலநாதன் தனது தாயின் படுக்கையறையில் அவளைச் சந்திக்கிறான். காரசாரமான விவாதம் இடம்பெறுகிறது. தனக்குத் தன் மகன் தீங்கிழைத்துவிடுவானென்ற பயத்தில் ராணி உதவிக்குக் கூக்குரலிடுகிறாள். அறையின் திரைமறைவில் ஒளிந்திருந்த பிரதம மந்திரியும் உதவி கோரிச் சத்தமிடுகையில், அரசிளங்குமரனால் குத்தப்படுகிறான். அரசிளங்குமரன் பிரதமமந்திரியின் உடலை இரகசியமான இடத்தில் மறைத்து விடுகிறான்.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற அரசன் அரசிளங்குமரனின் சொந்தப் பாதுகாப்புக்கென்று கூறி அரசிளங்குமரனைத் தூர இடமொன்றுக்கு அனுப்பி வைக்கிறான். ஆனால் வழியில் அவனைக் கொலை செய்துவிட ஒழுங்கு செய்கிறான். இதை அறிந்த அரசிளங்குமரன், சன்மானம் தருவதாகக் கூறி ஒரு கொள்ளைக்காரர் கப்பலின் உதவியுடன் தப்பி விடுகிறான். இதற்கிடையில், தன் தந்தை கொலையுண்டதைக் கேள்விப்பட்ட ரூபாவதி பைத்தியமாகிறாள். மகன் ஜெயபாலன் நாட்டு மக்களை கிளர்ச்சிசெய்யத் தூண்டுகிறான்.

அருள்நேசன் கமலநாதனைச் சந்திக்கிறான். கொள்ளைக்காரக் கப்பற்காரருக்கு சன்மானம் வழங்குகிறான். ஜெயபாலனின் பலாத்கார கோலத்தைவிட்டு, அரண்மனைக்கு இப்போது செல்ல வேண்டாமென்று கமலநாதனைத் தடுக்கிறான். அருள்நேசன் அரண்மனைக்குத் திரும்பியதும், அங்கு ரூபாவதியின் சோக மரணத்தை அறிகிறான். இதைக்கூறக் கமலநாதனிடம் திரும்பவும் செல்கிறான். இருவரும் குதிரைகளில் ஏறி அரண்மனை நோக்கிச் செல்கையில் பிரேத ஊர்வலம் மயானத்திற்கு அருகில் வந்து விட்டது. அங்கு ஜெயபாலன் கமலநாதனைத்தாக்குகிறான். கமலநாதனின் தொண்டையைப் பிடித்து நசுக்கும் பொழுது, அரசன் வேறொரு விதத்தில் வஞ்சம் தீர்க்க வழி செய்து தருவதாகக் கூறி ஜெயபாலனை விலக்கி விடுகிறான். கமலநாதனை ஒழித்துக் கட்டும் எண்ணமே அரசனின் மனதில் இருந்தது.

இருவருக்குமிடையே வாட் சண்டை ஒன்றை ஒழுங்கு செய்த அரசன், ஜெயபாலனின் நஞ்சு பூசப்பட்ட வாளிலிருந்தும் அரசிளங்குமரன் தப்பினாலும், ஆழமான கோப்பையொன்றினுள் விஷத்தை ஊற்றி, மதுபானத்தில் கரைத்து போகும் மெழுகினால் அடைத்து, அதை அரசிளங்குமரனுக்கு அளிக்க ஏற்பாடு செய்கிறான்.

ஒழுங்கு செய்யப்பட்ட வாட்போரில் கமலநாதனும் ஜெயபாலனும் நஞ்சு பூசப்பட்ட வாளினால் காயமடைகிறார்கள். விஷங்கலந்த கோப்பையிலிருந்து தற்செயலாக அருந்திய ராணி மூர்ச்சித்து விழுகிறாள்,

தன்னைக் கொல்ல அரசன் இட்டமிட்ட சதியை அறிந்த கமலநாதன் அவனைக் குத்திக் கொலை செய்கிறான். மரணத்திலிருந்து தப்பிய ஒரே ஒருவனான அருள்நேசனிடம் தனது கதையை உலகுக்கு எடுத்துக் கூறுமாறு கேட்டுக்கொண்டு அரசிளங்குமரன் உயிர் துறக்கிறான்.

## தமிழிலும் செய்க

கிளிநொச்சி, திங்கள்

காப்புறுதி கூட்டு ஸ்தாபனத்திலுள்ள படிவங்களனைத்தையும் தமிழில் மொழிபெயர்க்கும்படி கிளிநொச்சி பாராளுமன்றஉறுப்பினர் காப்புறுதி தலைவருக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

---

## கொலை வழக்கு ஒத்திவைப்பு


மட்டக்களப்பு, திங்கள்


மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்தவரும் முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு குளத்தில் நீர்ப்பாசன இலாகா மெசின் இயக்குனராக கடமை செய்பவருமான இரத்தினம்-நடராசா என்பவர் அதே இலாகவில் தொழிலாளியாக வேலை செய்த பீரிஸ் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக முல்லைத்தீவுப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கத்பட்டது

நீதிபதி விசாரணையைஇம் மாதம் பதின்நாலாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

எதிரி சார்பில் புரக்டர் திரு. கே. ஐயாத்துரையின் அனுசரணையுடன் அட்வகேட் திரு கே வி எஸ் சண்முகநாதன் ஆஜரானார்.

முல்லைத்தீவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி சப் - இன்ஸ்பெக்டர் திரு எம் ஈ குருஸ் வழக்கை நடத்தினார்.


பாகிஸ்தான் இன்டர்னஷெனல்
ஏர் லைன்சில் பறப்பவர்கள்
பெருமக்கள் தான்!

தி சிலோன்
ரப்பர் இண்டஸ்றீஸ்
கந்தோர் சாமான்கள், கிரேப் பேப்பர்
ஆகியவற்றுக்கு விற்பனையாளர்கள்
191, 1/1, 4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.
பொம்மை பலூன்களையே
CRI
கேட்டு வாங்குங்கள்
உற்பத்தியாளர்கள்:
தி சிலோன்
ரப்பர் இண்டஸ்றீஸ்
191, 1/1, 4-ம் குறுக்குத் தெரு. கொழும்பு - 11
அத்துடன் கந்தோர் சாமான்கள்,
கிரேப் பேப்பர் உற்பத்திசெய்பவர்கள்

With the
Compliments
of
K. N. H.
Mohamed&Co.
Gaffoor Buildings
Fort,
COLOMBO.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்க அதிபர் வாழ்த்து

இலங்கையிலேயே முற்றிலும் தயாரிக்கப்பட்ட 'ஹம்லெட்'டின் புதிய தமிழாக்கமான இப்படத்தைநான்வரவேற்கிறேன். இந்தமுயற்சிக்கான யோசனை யாழ்ப்பாணத்திலேயே பிறந்தது பற்றி எனக்குத் தனிப்பட்ட மகிழ்ச்சி. தாங்கள் தேர்ந்தெடுத்த கதை மூலம் இப்புதிய திறுவனம் துணிவைக் காட்டியுள்ளது. ஏனெனில் 'ஹம்லெட்' எந்த மொழியிலும் படமாக்கப்படுவது சிரமமான காரியம். சம்பந்தப்பட்ட கலைஞர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

வேர்ணன் அபயசேகரா
அரசாங்க அதிபரும்
யாழ். பிரதேச கலாமன்றத் தலைவரும்.

# ஈழத்தமிழரின் - சாதனை

ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியரின் படைப்பான 'ஹமலட்'டைத்தழுவி மைந்த கலை கலாச்சாரப் பண்பாட்டைப் பிரதிபலித்து இலங்கையில், இலங்கை நடிக நடிகையர் கலைஞரைக் கொண்டு தயாரித்து, சிலோன் தியேட்டர்ஸ் சர்க்யூட் திரைகளில் வெற்றி முரசம் கொட்ட இன்று வெளிவருகிறது, கலாபவன பிலிம்ஸ் அளிக்கும் திரையோவியம் 'கடமையின் எல்லை'.

பிறநாட்டார் நடிப்புத் திறனுக்கும் கலை ஆர்வத்திற்கும் நாட்டிய நடன இசைக்கும் ஈழத்துத் தமிழர் சளைத்தவர் அல்லர் என்ற உண்மையைக் 'கடமையின் எல்லை' பிரதிபலிக்கின்றது.


தனிப்பெரும் கலைத்திறனையும், கலைஞர்களையும் அன்னவர் ஆடல் பாடல்களையும் வாட்சண்டை, குதிரையேற்றம் போன்ற திகில் சாகசங்களையும், காதற் காட்சிகளையும் ஒருங்கே பின்னிப் பிணைத்துப் பெருங்கலை விருந்தாகக் காட்சிதர இருக்கின்றது, 'கடமையின் எல்லை'

இயற்கை எழில் கொழிக்கும் ஈழத்திற்கு தனித்தே உரித்தான கண்கவர் காட்சிகளை நுவரெலியா, கக்கலை, அம்பத்தலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் படம்பிடித்துத் தந்துள்ளார், மதறாஸ் பயிற்சிபெற்றவரும் சிங்களப் படங்கள் பன்னிரண்டுக்குமேல் கையாண்டு புகழ்பெற்றவருமான ஏ. ரி. அரசு அவர்கள். வாத்தியங்கள் எழுப்பும் நுண்ணிசையைத் தன்னிசையாக்கித்தரமான 'ஒக்செஸ்ரா' இசையைத் தந்துள்ளார் ரி எப். லத்திப் அவர்கள்.

அன்னவரின் நல்லிசையையும், மற்றும் ஆடல் பாடல் வசனநடைகளையும் அப்படியே ஒலிப்பதிவு செய்து தந்துள்ளார் சுண்டிக்குழி சோமசேகரன்.

திரைக்கே உரித்தான கலைத்திறனைக் கையேற்றுத் தன் வன்மையைக் காட்டியுள்ளார். ஜே. ஏ. வின்சென்ட்.

படத்தொகுப்பைப் பொறுப்பேற்றுப் பணியாற்றியுள்ளார் எட்வின்லிற்றின்.



# கலாபவனம் பிலிம்ஸ் அளிக்கும் கட...

## திகில் நிறைந்த காட்சிகள்

கலாபவன பிலிம்ஸாரின் 'கடமையின் எல்லை' சரித்திர தமிழ்ப்படம் இன்று சிலோன் திரைகளில் திரையிடப்படுகிறது.

பல இலட்சம் ரூபாய்களைப் பயமின்றி செலவு செய்து பார்ப்போர் பிரமிக்கும் வண்ணம் காட்சிகளை அமைத்து அல்லும் பகலும் அயராது உழைத்து 'கடமையின் எல்லை'யை உருவாக்கியுள்ளனர்.

ஈழத்தில் உள்ள திறமைமிக்க நடிகர்களையும், கலைஞர்களையும் ஒன்று சேர்த்து வாட்போர், குதிரை ஏற்றம் போன்ற திகில்மிக்க சாகஸ செயல்களில் நடிகர்களுக்குப் பயிற்சி கொடுத்து ஈழத்தின் கலைவிருந்தாக 'கடமையின் எல்லை'யை உருவாக்கிய டைரக்டர் காலஞ்சென்ற திரு. பி. எம் வேதநாயகம் பி. ஏ. அவர்கள். வாட்போர், குதிரை ஓட்டம் மற்றும் தீரச் செயல்கள் நடிகர்களால் சுயமாகவே கையாளப்பட்டுள்ளன. உடலில் உண்மையான வெட்டுக்காயங்களில் இருந்து இரத்தம் வழிந்தோட வாட்போர் புரியும் காட்சிகள் புரவிகளின் மூர்க்கத்தனமான பாய்ச்சல்கள் கத்திச் சண்டை போன்ற ஆபத்தான பயங்கரக் காட்சிகளை இப்படத்தில் கண்கூடாகக் காணலாம்.

இரத்தம் சிந்தி உயிரைத் தியாகம் பண்ணி உருவாக்கப்பட்ட 'கடமையின் எல்லை' ஈழத்தின் சரித்திர ஏட்டிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய சாதனையை நிலைநாட்டக் காத்திருக்கிறது.

மற்றும் ஈழத்தில் எழில் மிகு காட்சிகளையும் வளம் குன்றுமல் ஓடும் நதிகளையும் பல கோணங்களில் இருந்து படமாக்கியுள்ளார்கள்.

வெளிப்புற, உட்புறக் காட்சிகளை ஒரே நேரத்தில் பல கமராக்களின் மூலம் கவர்ச்சியான முறையில் படம் பிடித்த பெருமை சிலோன் ஸ்ருடியோவைச் சேர்ந்த விற்பன்னர் திரு ஏ. ரி. அரசு அவர்களையும் கபூர் அவர்களையுமே சாரும்.

பிரமாண்டமான காட்சிகளையும் காலத்தால் அழிக்க முடியாத கலை அமைப்புக்களையும், சித்திரவேலைசிற்ப வேலை போன்ற கலைப் பகுதியை சிலோன் ஸ்ருடியோவைச் சேர்ந்த கலை விற்பன்னர் வின்சன்ட் அவர்கள் மிகவும் திறமையாகக் கையாண்டுள்ளார். படத்தின் தொகுப்புக்களை மிகவும் நுணுக்கமாக திரு. எட்வின் லிற்றின் அவர்கள் கவனித்திருக்கிருர்கள்.

## கலைஞர் வாழ்வில் ஒரு திருப்பம்

ஈழத்துக்கலைஞர்கள் வாழ்வில் ஒரு புதிய ஒளி தோன்றியுள்ளது. அதுதான் கலாபவன பிலிம்ஸாரின் துணிகர முயற்சி- முதல்படைப்பு ''கடமையின் எல்லை''

ஈழத்தில் இலைமறைந்த காய்களாய் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் கலைஞர்கள் கணக்கற்றவர்களாவர். அவர்களுக்கு தங்கள் திறமையைக் காட்டச் சந்தர்ப்பம் கிடைக்குமானல் இந்த நாட்டில் எத்தனையோ திறமைமிக்க கலைஞர் தோன்ற முடியும். ரசிகர்கள் எதிர்பார்க்கும் அத்தனை திறமைகளையும் எமது கலைஞர்களிடத்தில் காண முடியும். அந்தப் பொன்னுன நாள் ஆரம்பமாகிறது. ஈழத்தில் இலக்கியப் படைப்பான ''கடமையின் எல்லை'' வெற்றிப்பாதையின் முதல் படியில் காலடி வைக்கிறது.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் கலையோவியமாக, கலாபவன பிலிம்ஸ் கொடியின்கீழ், ''கடமையின் எல்லை'' என்ற பெயரில் விருந்தளிக்கும் கலையோவியமாகப் படைக்கப்பட்டிருப்பது ''கடமையின் எல்லை''.

## நட்ட நடுநிசியி...

### இதோ ஒரு காட்...

நட்ட நடுநிசி - பயங்கர அமைதி ...... கோட்டை வாசலில் காவல் வீரன் இருவருடன் கதைத்தபடியே எதையோ நம்ப மாட்டாமல் கேலிசெய்தபடி இருக்கிருன். ராஜ விசுவாசியும் கதாநாயகன் கமலநாதனின் உண்மை நண்பனுமாகிய அருள்நேசன் ...... திடீரென ஒரு பயங்கரச் சத்தம்... அதோ ...... என்ற பயம் தெரிவித்த குரல் காவலன் வாயிலிருந்து வருகிறது— அவன் சுட்டிக்காட்டிர் திசையில் மூவருடைய பார்வையும் ஒன்றிவிட்டது. கண்கள் பிதுங்கி விட்டவை போல்அசையாமல் நின்றன. கால்கள் நகர மறுத்தன... அப்படி என்னதான் அவர்கள் கண்டார்கள். அதோ— ஆகாய மார்க்கமாக அந்தரத்தில் பேரச்சகோலத்துடன் ஒரு அருவம் அவர்களை நோக்கி வருகிறது. அதோ ... அதோ ... கட்: ஓகே: என்ற குரல்கள் சேர்ந்தே ஒலித்தது.

மேலே என்ன நடந்தது என்கிறீர்களா? அதை இப்போது சொன்னுல் சுவை கெட்டுவிடும். கலாபவன பிலிம்ஸாரால் தயாரிக்கப்பட்டுஇன்றுசிலோன் தியேட்டரில் வெளியீடாக வெளிவரும் ''கடமையின் எல்லை'' என்ற ஈழத்தின் முதல் தமிழ்ப்படத்தில் இப்படி ஒரு காட்சி வருகிறது இக்காட்சியில் அருள்நேசனுக ஏ. ரகுநாதனும், அவரது நண்பர்களாக எஸ். நாகராசனும், ஏ, சத்தியமூர்த்தியும், அருவமாக என். ரி. அரசுவும் தோன்றி நடிக்க, ஏ. ரி. அரசு கமராவைக் கையாள, திரு. பி. எம். வேதநாயகமவர்கள் இயக்குகிருர், இப்படத்தில் மற்றும் ஆர். ரவீந்திரன், தேவன் அழகக்கோன், உதயகுமார், மிஸ். ஜியோர்ஜ் நிர்மலா, ஏ. ஐராங்கனி, எஸ். காசிநாதன். கே. துரைசிங்கம், எஸ். பஸ்தியாம்பிள்ளை முதலியோர் நடித்திருக்கிருர்கள். ஈழத்தில் திரைப்பட வரலாற்றைத் தொடங்கி ஒழுங்கான ஒரு படத்தை தயாரித்து வெளியிட்டு இலங்கைக் கலைஞர்களுக்கு ஊக்கமூட்டிய முதல் ஸ்தாபனம் கலாபவலன பிலிம்ஸ் என்பதையாராலும் மறக்க முடியாதென்பதை இன்று நீங்கள்உணரப் போகிறீர்கள் என்பதை முன்னுடியே சொல்லிவைக்கிருேம்.

## இலங்கை... தயா... முடியு...

இலங்கையில்... கள் தயாரிக்க... என்று கேட்... இதோ பதில்... பிலிம்ஸ் ... எல்லை'' படித்த... பாமரர்வரை ... அம்சங்களுடன்... யுள்ளது - ம... யும் சண்டைக... உடுக்கும் இனி... அழகான நட... மாண்டமான ... சோடனைகள், ... டும் உடையலங்... ரைச்சுவாமி ... மேலாக அற்புத... எங்களுக்கும் ... என்று நிரூபிக்... பெரும் கலைஞ... சேர்த்து ... காவியமாக ... த்து முடித்த... கடமையின்எ... விட்டதென்ற... திரு. வே... மேற்பார்வையி... 'கடமையின் எ... முதல் வெண் ... பவனிவரப்போ... நிலையின் எ... களிலும் உல...

தேவன் அ...
ஏ. ஐராங்...
ஆர். ரவீ...
ஜி. நிர்ம...
ஏ. ரகுநா...
பி. உதய...
எஸ். பஸ்...
கே. துரை...
ஆர். காசி...
என். ஆர்...
என். ரி. ...
குமாரி

ஓக்கல்

பி. ஜே. அ...
என். சத்தி...
எஸ். நாகர...
என். கனக...
எவ். எக்ஸ்...
எஸ். சவரி...
எஸ். இம்ம...
எஸ். இனா...

## கண்ணீரிலே பிறந்தகாவியம்

தமிழியல் நாடகங்களின் தலைசிறந்தது, மகாகவி ஷேக்ஸ்பியரின் ஹம்லட் அந்த நாடகத்தைத் தமிழில் திரைப்படமாக்கிப் பார்க்க ஆசைப்பட்டார் திரு. பி. எம். வேதநாயகம். தக்க துணையுடன் பெருளுதவியுடனும் தளராது பாடுபட்டு எத்துறையிலும் இலங்கை பின்நிற்கவில்லை என்று நிரூபித்து கலாபவன பிலிம்ஸ் கொடியின்கீழ் 'கடமையின் எல்லை' என்று பெயருமிட்டு திரையிட இறுதிவேலைகள் நடைபெறும் சமயம் ஸ்ருடியோவிலேயே, நாடகத்தில் மகாகவி காட்டிய முடிவு போல் டைரக்டர் திரு பி. எம். வேதநாயகம் அவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். ஆனல் அவர் படைத்த இலக்கியம் 'கடமையின் எல்லை' வெளுத்திரையில் ஈழத்து சினிமா உலகுக்கு ஒரு மைல் கல்லாக விளங்குமென்பது திண்ணம்.



## -ஈழத்திலும் ஒ... தரமான தமிழ்ப்ப...

ஆச்சரியமல்ல அறிமுகப்படுத்தப்படவேண்டிய நாள் நெருங்கி விட்டது. ஆமாம் ...... சிலோன் தியேட்டர்ஸ் சேர்க்யுட் படமாளிகையில் இன்றுமுதல் இலங்கையின் முதல் தமிழ் இலக்கியப் படமான கலாபவன பிலிம்ஸின் கன்னிமுயற்சி 'கடமையின் எல்லை' உங்கள்பார்வைக்கு திரையிடப்படுகிறது.

பிறநாட்டவர்போல் நம் நாட்டிலும் படம் எடுக்க முடியுமா என்றுதன் நம்பிக்... கையற்று ... ன்போல் முப்பியவர்களை... வைக்கவும் நம... அற்புதமான ... இருக்கிருர்களே... கும் ஒடுகாலம் ... என்று ஏங்கி... மகிழ்ச்சியளிக்க... மையின் எல்லை''... ந்வதுள்ளது.

இப்படத்தில்... களுக்குமேலப... வார்கள். இயற்... கள் மயிர்க்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மையின் எல்லை

## ...ல்...

...டசி

## ...கையில் ...ரிக்க ...மா?

...தமிழ்ப்படம் ...முடியுமா ...டவர்களுக்கு ...கலாபவன ...'கடமையின் ...வர் முதல் ...கவரக்கூடிய ...தயாராகி ...பிரக்கச்செறி ...ன், மனதை ...ப கீதங்கள், ...ங்கள், பிர ...காட்சிகள் ...பிரமிப்பூட் ...காரம், குதி ...இத்தனைக்கும் ...மாக நடிக்க ...தெரியும் ...கும் அடும் ...களை ஒன்று ...பருமைமிக்க ...இதைப்படை ...ட்டு.....தன் ...லை முடிந்து ...காலஞ்சென்ற ...நாயகத்தின் ...ல் தயாரான ...லை" இன்று ...திரையில் ...கிறது. இல ...ல்லாப்பாகம் ...தவிறந்த



(11-ம் கலத் தொடர்ச்சி)

தித்து பேதம் விலக்கிக் கூடு கின்றனர். தங்கள் இருவரையும் அரசனும், பிரதம மந்திரியும் ஒளிந்திருந்து பார்ப்பதை அரசிளங்குமரன் கண்டுவிடுகிறான். இச்சந்திப்பு முன்னேற்பாடாக ஒழுங்கு செய்யப்பட்டதென்றும, ரூபாவதிக்கும் இது பற்றி ஏற்கனவே தெரியுமென்றும் அவன் எண்ணுகிறான். தந்தை எங்கே என்று அவளை வினவுகிறான். தந்தை வீட்டில் என்று அவள் பதிலளித்ததும் ஆத்திரமடைந்த அரசிளங் குமரன் அவளை ஏசி, கன்னியாஸ்திரி மடமொன்றில் சேரும்படி சொல்லுகிறான்.

தான் ஒழுங்கு செய்த நாடகம் நடைபெறமுன், அரசனின் நடத்தையை அவதானிக்குமாறு தனது நண்பன் அருள்நேசனிடம் அரசிளங்குமரன் கேட்டுக்

(8-ம் பக்கம் பார்க்க)

கலைஞர்கள் எல்லாம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள இப்படம் ஈழத்துக் கலைஞர்களுக்கு ஒரு எதிர்கால நம்பிக்கையை நிச்சயம் அளிக்கும் என்பது உறுதி.

## கட்டிளம் காளையும்...

### மற்றொரு காட்சி இதோ

துள்ளிவிளையாடும் புள்ளி மான்ரூபா களங்கமற்ற மனதோடு காதல் வசப்பட்டாள், கண்நிறைந்த காதலன், கனகமணிமுடி தாங்கும் கட்டிளங்காளை கமலநாதன் அவனும் அவளை நேசித்தான். நீண்ட இடைவேளைக்குப் பின் மீண்டும் சந்தித்தார்கள் அவர்கள். ஜோடிப்பறவைகள் போல பாடிமகிழ்ந்தார்கள். அவள் தன் வாழ்வில் ஏற்பட்ட கவலைகளை மறந்தாள். அந்தநேரம் அவளின் சிறியதந்தை அந்நாட்டுமன்னன் இன்பதாசனும், அவனின் அமைச்சரும் ரூபாவின் தந்தையுமாகிய மதியூகியும் மறைந்திருந்து பார்ப்பதைக் கண்டுவிட்டான் காளை. காதலி, அவர்கள் தூண்டுதலின் பேரில்த்தான் தன்னைக் காதலிப்பதாக நடிக்கிறாள் எனஎண்ணிவெகுண்ட கமலநாதன் - கட்டி அணைக்க இருந்த உடலை எட்டி உதைத்தான்.... துரோகி... என்றான்... தூற்றினான். பேதை துடித்தாள்... பிழை என்னசெய்தேன் என்றுபதறினாள். அவள் அறிவாளா அவனில் வெறுப்புக்குக் காரணத்தை ஏன் அப்படிப்பேசுகிறீர்கள் என்றாள் எதிரில் நில்லாதே போய்விடு என்று சீறினான் ...... கட் என்ற குரல்,

ஆமாம். இப்படியான உணர்சிமிகுந்த காட்சியொன்று திரைக்குவரவிருக்கும் கலாபவன பிலிம்ஸின் "கடமையின் எல்லை"க்காக சுடப்பட்டது. ரூபாவாக நிர்மலா ஜோர்ஜ்ஜும், கமலநாதனாக ஆர். ரவீந்திரனும் இன்பதாசனாக தேவன் அழகக்கோனும், மதியூகியாக எஸ். பக்தியாம்பிள்ளையும் நடித்துதுளார்கள். மற்றும் ஏ. ரகுநாதன், உதயகுமார் ஐராங்கனி முதலியோர் நடித்திருக்கும் இப்படம் ஈழத்து தமிழ் சினிமாப்படங்களுக்கே ஒரு முன்னோடியாகத்திகழும்என்பது திண்ணம்,

## விமர்சனம்

தென்னிந்தியாவில்தான் தமிழ்ப்படங்கள் தயாரிக்கப்படலாமென்ற எண்ணத்தைப் போக்கடிக்க முழுமூச்சுடன் எடுக்கப்பட்ட படம் போலத் தோன்றுகிறது, 'மகாகவி ஷேக்ஸ்பியரின் ஹம்லட்' நாடகத்தைத் தழுவி உருவாக்கப்பட்டுள்ள "கடமையின் எல்லை" என்ற தமிழ்ப்படம். இலங்கையில் தயாரிக்கப்பட்டுள்ள தமிழ்ப் படங்களில் குறைகளும் பல படப்பிடிப்புக் கலை நுணுக்கப் பற்றாமையும் காணப்பட்டாலும், இப்படம் சில மைல்கல் தாண்டி முன்னேறியிருக்கிறது என்று கூறலாம். கடமையின்எல்லை படத்தில் குறிப்பாக வெளிப்புறக் காட்சிகள், குதிரையேற்றம், வாட்சண்டை போன்ற பல அம்சங்கள் மிக அருமையாக அமைந்துள்ளன. யாழப்பாணத்தில் டச்சுக்காரர் கட்டிய கோட்டையை இப்படத்தில் காணும்போது நாம் எல்லாம் எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு அப்பால் இழுத்துச் செல்லப்படுகிறோம்.

கதை 'ஹம்லட்' நாடகத்தைத்தழுவியது. நடிக, நடிகையர் இத்தொழிலுக்குப் புதியவர்கள். என்றாலும் சிரமப்பட்டு நன்றாக நடித்துள்ளார்கள். நடிப்பு சில இடங்களில் நாடக பாணியில் அமைந்திருக்கின்றது. இது குறைதான். ஆனால் இனிவரும் படங்களில் தவிர்க்கப்படலாம். தேவன் அழகக்கோன் அரசனாக, ஏ. ரகுநாதன் அருள் நேசனாக, ஆர். ரவீந்திரன் கமலநாதனாக, ஜி. நிர்மலா ரூபாவாக, ஏ. ஐராங்கனி ராணியாகநடித்துள்ளார்கள். நடிக, நடிகையர்கள் காண்பித்துள்ள ஆர்வம் பாராட்டுக்குரியது. வசனம், பாடல், இசையமைப்பு, பின்னணி யாவும் நன்றாக அமைந்துள்ளன. ஏ. டி. அரசு காமராவைச் சிற்சில இடங்களில் மிக அருமையாகக் கையாண்டுள்ளார்.

சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் இன்று தொடக்கம் திரையிடப்படும். "கடமையின் எல்லை' கலாபவன பிலிம்சாரின் துணிச்சலான முயற்சி.

—செந்திமணி

## தயாரிப்பு

கதை: வில்லியம் ஷேக்ஸ்பியரின் 'ஹம்லெட்'டைத் தழுவியது
வசனம்-பாட்டு: வித்துவான் ஆனந்தராயன்
எம். பக்தியாம்பிள்ளை
எம். விக்டர்
ஒளிப்பதிவு டைரக்டர்: ஏ. வி. அரசு
ஒளிப்பதிவாளர்: எம். ஏ. கப்பூர்
இசை: பி. எம். வேதநாயகம் பி. ஏ.
தயாரிப்பு மனேஜர்: ராஜா ஜொகவா
கே. கதிர்காமத்தம்பி
ஏ. ஜே. சார்ல்ஸ்
டைரக்ஷன்: பி. எம். வேதநாயகம் பி. ஏ.
பின்னணி: வி. முத்தையா
கமலலோசனி வேலுப்பிள்ளை
அம்பிகா தாமோதரம்
புவனேஸ்வரி தேவராசா
ஒலிப்பதிவாளர்: மி. சோமசேகரம்
வாத்திய இசை: ரி. எவ். லத்திப்

### விசேஷ அம்சங்கள்

குதிரைச்சவாரி, வாட்சண்டை, அதிக செலவில் உட்புறக் காட்சிகளும், உடைகளும். நுவரேலியா, ஹக்கல, அம்பவெல, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் படமாக்கப்பட்ட காட்சிகள்.

## கதைச் சுருக்கம்

கலிங்கத்து அரசன் இறந்து இரண்டுமாதகாலத்துள், அரசி இறந்த அரசனின் சகோதரனை மணம் முடித்து, அவனை அரசனாக்கி விடுகிறாள். சிந்தனை மிகுந்த அரசிளங்குமரன், இச்சம்பவங்களினால் நிலைகுலைந்து விடுகிறான்.


இதற்கிடையில் கோட்டைக் காவலாளர்கள் இறந்த அரசனின் பேயுருவத்தைச் சந்திக்கின்றனர். இச் செய்தியைக் கேட்டு அரசிளங்குமரன் அங்கு செல்கிறான். தன்னைத் தனது சகோதரன் கொலை செய்ததாகவும், அதற்கு வஞ்சம் தீர்க்கும்படியும் பேய் அவனிடம் கூறுகிறது.

பிரதம மந்திரி மதியூகியின் மகன், அரசிளங்குமரன் தனது சகோதரி ரூபாவதியில் அக்கறை செலுத்துவதைக் கவனித்து, அவளை எச்சரித்து, அத்தொடர்புக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு சொல்கிறான். அவளுடைய தந்தை மதியூகி தொடர்பை முறித்து விடுகிறான்இதனால்மனமுடைந்த ரூபாவதி அமைதி இழந்து, நித்திரையற்ற இரவுகளைக் கழிக்கிறாள். அரசிளங்குமரன் கமலநாதனும் தூக்கமின்றிக் கலங்குகிறான். ஓரிரவு ரூபாவதியின் படுக்கையறைக்குள் பைத்தியக்காரன் போல் பூட்டை உடைத்துச் செல்லும் கமலநாதன், பெருமூச்சு விட்டுச் செல்கிறான். இச்சம்பவத்தினால் அச்சமுற்ற ரூபாவதி தந்தையிடம் இது பற்றிக் கூறுகிறாள். இது காதல்நோயன்றி வேறென்றுமல்ல எனஎண்ணிய மதியூகி, சில காதற் கடிதங்களையும் கொடுத்து அரசனிடம் விஷயத்தைச் சொல்லி வைக்கிறான். இவ்விவகாரத்துக்கான விளக்கத்திற்கு மேலும் ஆதாரங்கள் வேண்டிய அரசன், அரசிளங்குமரனின் காதலை ரூபாவதியை ஏற்றுக்கொள்ளும்படி கூறுமாறு பிரதம மந்திரியிடம் உத்தரவிடுகிறான்.

பின்பொரு கட்டத்தில், நாடகக் குழுவினர் சிலர் அரசிளங்குமரனுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். அரசனின் பேயின் கதையை உருசப்படுத்த அரசிளங்குமரன், சில குறிப்பிட்ட வாக்கியங்களை அடக்கி பேயின் கதையைப்போல ஓர் நாடகத்தை அரங்கேற்றுமாறு பிரதான நடிகனைக் கேட்டுக்கொள்கிறான்.

தோட்ட மொன்றில் ரூபாவதியும் அரசிளங்குமரனும் தற்செயலாகச் சந்

7-ம் கலம் பார்க்க)



## நடிக - நடிகையர்கள்

| | | |
|---|---|---|
| ...அழகக்கோன் | — | இன்பதாசன் |
| ...கனி | — | நீலாவதி |
| ...ந்திரன் | — | கமலநாதன் |
| ...லா | — | ரூபவதி |
| ...தன் | — | அருள்நேசன் |
| ...குமார் | — | ஜெபாலன் |
| ...தியாம்பிள்ளை | — | மதியூகி |
| ...சிங்கம் | — | விஜயகரன் |
| ...நாதன் | — | நரசிம்மன் |
| ... அமிர்தவாசகம் | — | மல்லவராயன் |
| ...ரசு | — | அருவம் |
| | — | கடற்கொள்ளைத் தலைவன் |
| | — | குரங்காட்டி |

| | |
|---|---|
| ...பிர்தநாயகம் | ரி. மகேந்திரன் |
| ...மூர்த்தி | எல். எஸ். குலநாயகம் |
| ...சா | பி. துரைச்சாமி |
| ...ரியர் | ஜே. ஜி. வெக்டர்பிள்ளை |
| ... யோக்கிம் | பி. அந்தோனிப்பிள்ளை |
| ...த்து | ஏ. பி. தங்கநாதன் |
| ...னுவேல் | எம். கணேசன் |
| ...ப்பா | எஸ். திருநாவுக்கரசு |


இன்னும் பலர்

## ஒரே பார்வையில்

ஈழத்துத் தமிழ்த்திரை வரலாற்றிலே மாபெரும் புதுமை!

இந்நாட்டுக் கலைஞர்களுக்கும், நடிகர்களுக்கும் திரைப்பட உலகில் சந்தர்ப்பம் ...வித்து திரைக்கலையை ...மேலும் விருத்தியாக்குதல் வேண்டும் என்பதையே பெருநோக்காகக் கொண்ட கலாபவன பிலிம்ஸாரின் பிரமாண்டமான முதல் சாதனை,

சண்டைக் காட்சிகள் - மனதைக்கவரும் காதற்காட்சிகள் ஆடம்பர உடையலங்காரம்- ஆகா, பாடவைக்கும் அரியகீதங்கள் இத்தனையும் பவிந்த முத்தான படம் 'கடமையின் எல்லை.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம் கார்டின்

பாம் கார்டின் மண்டபமும் சாலையும்
கொழும்புக்கு வெளியே
இருப்பவற்றில் சிறந்தவை

★

எல்லாக் கொண்டாட்டங்களுக்கும்
- முக்கியமாகத் திருமணங்களுக்கு -
மிக உகந்த இடம்

★

500 பேருக்கு இடவசதி உண்டு

விபரங்களுக்கு:-

**பாம் கோர்ட்**

மெயின் ஸ்ரீட், ::-:: யாழ்ப்பாணம்.

# T. K.
## நேத்திரா அமிர்த தைலம்

இத்தைலம் இரு கண்களுக்கும் அமிர்தம் போன்றது. ஒருதடவை பாவித்தால் உண்மை விளங்கும். நாள்பட்ட பீனிசம், ஒருத்தலை வலி, தலை கிறுகிறுப்பு, கண்பார்வைக் குறைவு, கண்களில் நீர் வடிதல் முதலியவைகளை நீக்கி கூந்தலை அழகாகவும் நீளமாகவும் அடர்த்தியாகவும் வளர வைக்கும்.

தபால் செலவு வேறு.

6 அவுன்ஸ் புட்டி ஒன்றுக்கு ரூ. 3-00.
12 அவுன்ஸ் புட்டி ,, ரூ. 5-50.

## அமிர்தா ஜீரண சக்தி லேகியம்

இந்த லேகியம் பல ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது. வாய்வு, மலச்சிக்கல், தேக ஊரல், மூலச்சூடு, சிரங்கு மற்றும் இரத்த அழுத்தத்தினால் உண்டாகும் வியாதிகளையும் பாவித்த மாத்திரத்திலேயே குணமளிக்கவல்லது.

ஒருதடவை பாவித்தால் உண்மை விளங்கும்.

தபால் செலவு வேறு.

சிறிய புட்டி ஒன்றுக்கு ரூ. 3-00.
பெரிய புட்டி ,, ரூ. 5-50.
வி. பி. பி. ஒடர் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு:-

**செல்லராஜா அன் கோ.,**
பாக்கியலெட்சுமி வைத்தியசாலை
170, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

உங்கள் வியாதி எதுவாயினும் சரி லெட்டர் மூலம் தொடர்புகொள்ளுங்கள். ஆலோசனை இலவசம்.

# எமது உளமார்ந்த ஆசியும் வாழ்த்துக்களும்

## முகம்மது அலி அப்துல் அலி

5 & 7, பெரியகடை, யாழ்ப்பாணம். — 81, பழைய சோனகதெரு, கொழும்பு - 12.

போன்: 515 தந்தி: செய்பீ ★ போன்: 6569 தந்தி: பர்வாலா

பலசரக்கு வியாபாரிகள்
கொமிஷன் ஏஜெண்டுகள் - போக்குவரத்து ஏஜெண்டுகள்

## சி. டபிள்யூ. ஈ யினல்
நியமிக்கப்பட்ட விற்பனையாளர்

தன்னலமற்ற சேவையே எமது தாரக மந்திரம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிவாரண உதவி

கொழும்பு, திங்கள்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வீடிழந்தவர்களுக்கு தலா ரூபா 300 வழங்கவும் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு தலா ரூபா 30 வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

REGAL—JAFFNA
NOW SHOWING
ROGER BROWNE
SCILLIA GABLE
in
M-G-M's
THE REVENGE OF SPARTACUS
(Technicolor)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
PRISONER OF THE IRON MASK

நியூ காலிங்கன
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி — பத்மினி
நடித்த
புனர் ஜென்மம்

மகாத்மா தியேட்டர்
(தெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
திருவிளையாடல்

# மாஜி ராணுவ அதிகாரி தற்கொலை!

## மனைவியின் நச்சரிப்புத்தான் காரணமாம்

மாவிட்டபுரம், திங்கள்

மாஜி ராணுவ அதிகாரி ஒருவர் மனைவியின் நச்சரிப்புத் தாங்க முடியாமல் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் குப்பிளானில் நடைபெற்றுள்ளது.

குப்பிளானைச் சேர்ந்த மதியாஸ் குரூஸ்நாதர் என்னும் 30 வயது மாஜிராணுவ அதிகாரி கிருமிநாசினி அருந்தி மரணமானது சம்பந்தமாக மல்லாகம் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. எஸ். தாமோதரம்பிள்ளை நேற்று விசாரணை நடத்தினார். மரண விசாரணையில் காலஞ்சென்றவர் பாக்கியம் என்னும் பெண்ணை விவாகம் செய்ததாகவும், அவருக்கு இரண்டு குழந்தைகள் உண்டு என்றும் அவர் விவாகம் செய்தபின் ராணுவ உத்தியோகத்தை விட்டுவிட்டு மடுவில் அரசாங்க நிலம்பெற்று விவசாயம் செய்து வந்ததாகவும் அதனால் வரும் வருமானம் போதாமையினால் மனைவியின் சீதனக் காணியை விற்றுச் செலவழித்ததாகவும், பாரிசவாதத்தினால் பீடிக்கப்பட்டு குணமடைந்தபோதிலும் தொழில் செய்ய முடியாமையினால் வருவாய் குன்றியதாகவும் வருவாய் குறைந்ததனால் மனைவியின் நச்சரிப்பு அதிகரித்ததாகவும் இதனால் கிருமிநாசினி அருந்தி மரணமானதாகவும் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.




## கொழும்பு

செவ். 4-10-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

364 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதஸ்வரம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 அதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 சதம்ப இசை.

364 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-10 கிராமச்செய்திகள், 6-15 இராமசசிஞ்கை, 6-45 வீணை, 7-15 பேச்சு, 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிகழ்ச்சி, 9-15 நாதசுரம்—எம். எம். சுந்தரமூர்த்தி, 10-00 நேயர்விருப்பம்

## இடமாற்றம்

திருநெல்வேலி, திங்கள்

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியரான திரு. கே. இராசேந்திரம் இம்மாதம் தொடக்கம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு பிரிவில் கிராம சேவையாளர்களாக கடமையாற்றிய நால்வர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர், சுழிபுரத்தில் கடமையாற்றிய திரு. ஏ. சுவாமிநாதன் நவாலிக்கும், நவாலியில் கடமையாற்றிய திரு. கே. செல்வராசா சுழிபுரத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர், மாதகலில் கடமையாற்றிய திரு. எம். ஒப்பிலாமணி ஆனைக்கோட்டைக்கும், ஆனைக்கோட்டையில் கடமையாற்றிய திரு. பி. கபிரியேல்பிள்ளை மாதகலுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஃ ஃ ஃ

உடுவில், திங்கள்

இணுவிலில் நீண்ட நாட்களாக கிராம சேவையாளராக கடமையாற்றி வந்த திரு. கே. வேலும்மயிலும் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் தெல்லிப்பளை விமன்காமம் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அங்கு கடமைபுரிந்த கிராம சேவையாளர் இணுவில் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

திருநெல்வேலி, திங்கள்

கோப்பாய் கிராம சபையின் வருமான வரி மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய திரு. என். எஸ். சபாரத்னம் சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாசாலைக்கு உதவி ஆசிரியராகக் கடமையாற்ற இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, திங்கள்

மருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் ... கடமையாற்றிய திருமதி

## 'போதனையுடன் சாதனையும் வேண்டும்'

சங்கானை, திங்கள்

''வள்ளுவர் பெருமான் மனிதனையும் தெய்வமாகக் கண்டுள்ளார். நாம் மகாத்மா காந்தி போன்ற பெரியோர்களையே தெய்வமாகக் காண்கிறோம். இன்று காந்தி மகானின் நினைவு தினத்திலே சமூக ஏற்றத்தாழ்வு பற்றி நாம் நினைவு கூருவது பொருத்தமானது. போதனையில் மட்டுமின்றி சாதனையிலும் செய்துகாட்டிய பெருமை மகாத்மாவையே சாரும். இந்திய நாட்டின் சுதந்திரப் பிரச்சினையோடு நின்றுவிடாது தீண்டாமையை நீக்குவதற்கும் சமூகத்தில் ஏற்றத்தாழ்வின்றி மக்கள் வாழ்வதற்கும் பெரிதும் உழைத்தார் என்பதை காந்தி எழுதிய நூல்களின் வாயிலாக நாம் அறிகின்றோம்'' என்று சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் மாணவ இலக்கிய மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில சமூக ஏற்றத்தாழ்வு பற்றி வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி திரு. என். மாணிக்க நடராசா தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

பஞ்சமா பாதகங்களை அகற்றித்தான் வாழவேண்டுமென்று பெரியோர்கள் கூறியுள்ளபோதிலும் பாரதியார் ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று இன்னுமொரு குறைபாட்டை நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளார். இப்பிரச்சினை சிறுவர்களின் உள்ளங்களிலே நல்நோக்குடன் பதிந்தால்தான் வருங்கால சமுதாயம் ஏற்றத்தாழ்வின்றி அமையும் என்பது உறுதி.

பண்டிதர் சி. வேலுப்பிள்ளை, பண்டிதர் க. மயில்வாகனம், ஆசிரியர் செ. இராமலிங்கம் உட்பட இன்னும் பலர் பேசினர்.

## பால்விநியோகத்தில் மாற்றம்

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணை சங்கத்தினர் விநியோகம் செய்துவரும் பால் இம்மாதம் 4-ம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண சுகாதார அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பால் சபை ஒரு மாதத்திற்கு வேண்டிப் பாலை முற்கூட்டியே கொடுப்பதற்கு ஏற்ற ஏற்பாடுகள் செய்துள்ளதால்தான் இந் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.

## சிரியாவை ஆக்கிரமித்தால் எகிப்து தலையிடும்

கெய்ரோ, ஆக. 3

சிரியாவுக்குள் ஆக்கிரமிப்பு மூலம் பிரவேசிக்க எடுக்கப்படும் முயற்சி, அது ஜோர்டானிலிருந்தோ அல்லது இஸ்ரவேலிலிருந்தோ வந்தாலும்சரி ஐக்கிய அரபுக்குடியரசைத் தேவையெனில் இராணுவக் குறுக்கீட்டில் ஈடுபடச் செய்யுமென அதிகாரபூர்வமான 'அல் அஹ்ரம்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

(பி டி ஸி)

எம். அருளையா இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் கரவெட்டி திருஇருதயக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திருமதி எம். அருளையாவின் சேவையைப் பாராட்டி ஆசிரியர்களும், மாணவர்களும் பிரிவுபசாரம் நடாத்தினர்.

வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

பீடி புகையிலை

வெட்டி உணர்த்திய பீடி புகையிலை 1000 கன்று வரையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு பொ. இராமலிங்கம், 278, நாவலர்வீதி, நல்லூர். 1289

வீடும் காணியும்

வீட்டுடன் காணி 2 1/2 பரப்பு விற்பனைக்கு இருக்கின்றது. மணிக்கூட்டு வீதியில், பெருமாள் கோவில் முன்பாக இருக்கும் மேற்படி காணிபற்றிய விபரங்களை கன்னாதிட்டி வீதி, 6-ம் இலக்க விலாசத்தில் விசாரிக்கவும். 1298

காணி

கோண்டாவில் கிழக்குக் கொடித்தூக்கிச் சந்திக்கும், அரசினர் கமத்தொழில் பாடசாலைக்கும் மத்தியில் பஸ் தங்கும் ஸ்தானத்துக்கு கிழக்குப்பக்கமாக 9 1/4 பரப்புக் காணி விற்பனவுக்கு உண்டு. விரும்புவோர் நேரில் சந்திக்கலாம், சி. நல்லையா, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 1122

### சோதிடம்

பிரபல சோதிடம், சாதக பலன் ரூபா 3-00, ரேகை பலன் ரூபா 2-00, ஆருட பலன் ரூபா 1-00, S. இ. குருநாதன், 160 அரசடி ரோட், யாழ்ப்பாணம், சந்நிதமடம். 1205

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, இரத்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## நேர்முகப் பரீட்சை

### நெசவு மாணவிகளுக்கு

ஊர்காவற்றுறை, திங்.

புங்குடுதீவு கிழக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் ஆரம்பிக்கப் படவிருக்கும் மகளிர் நெசவு நிலையத்திற்கான கட்டிடம் பூர்த்தியடைந்து விட்டது. இந்நிலையத்தில் சேருவதற்குரிய மாணவிகளைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை சென்றவாரம் கி. மு. சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. பற்றிக் பரீட்சை நடாத்தினார்.

நெசவுநிலையத்தில் சேருவதற்கு ஒன்பதாம், பத்தாம் வட்டாரத்தில் இருந்து பெருந்தொகையான மாணவிகள் விண்ணப்பித்தனர். மாணவிகளின் வாழ்க்கைத்தரம் கல்வியறிவு என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு பரீட்சை நடாத்தப்பட்டது.

## இசைஆர்வம் அதிகரித்துள்ளது

யாழ்ப்பாணம், செவ்.

'ஒரு கலைஞர் தமது நாட்டுக்கு வரும்போது அவரைக் கௌரவித்து அவரது இசையைநாம் அநுபவிக்க இசைக்கச்சேரி வைப்பது நமது பண்பாட்டையும், இசைக்கலையில் உள்ள அன்பையும் காட்டுவதாகும்.

வட இலங்கைச் சங்கீத சபையின் ஆதரவில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற குமாரி முத்துலட்சுமி கல்யாணகிருஷ்ண பாகவதரின் வீணைக்கச்சேரிக்கு தலைமை தாங்கிய வட இலங்கைச்சங்கீதசபைதலைவரும், உதவி வித்தியாதிபதியுமாகிய திரு. எஸ். தனிகாசலம் மேற்கண்டவாறு கூறினார்

2வது வெற்றி வாரம்!
கிங்ஸலி (கிளிநொச்சி) பிளாஸா (வெள்ளவத்தை) நவ (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (காத்தான்குடி)
தீவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 100 ஆண்டின்பின் பெற்றோர்தின விழா

உடுப்பிட்டி, திங்கள்

சரவணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் சைவ வித்தியாலய பெற்றோர்தின விழா 100 ஆண்டுகளின் பின்னர் முதல் முறையாக உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நாளை மாலை 6 மணியளவில் நடைபெறவிருக்கின்றது. உடுப்பிட்டிப் பகுதி வித்தியாதிகாரி திரு. வீ. தர்மசங்கரி, உடுப்பிட்டி கி. ச. தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம், அட்வகேட் திரு. ஆர். சிவபாதசுந்தரம் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

## தாக்குதல் வழக்கு

திருநெல்வேலி, திங்கள்

அரியாலை நாவலடியில் அண்மையில் சின்னையா என்றவரையும் அவரது மகனை கனகரத்தினம் என்பவரையும் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியதாக அதே ஊரைச்சேர்ந்த பாலன் செல்லையாமீதும் அவரது மகனை தெய்வேந்திரம் மீதும் குற்றம்சாட்டி யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸ் அதிகாரி திரு. ஆர் தேவசகாயம் இன்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

## சேவை நலம் பாராட்டு

மீசாலை, திங்.

கலட்டியைச் சேர்ந்த நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி தங்கம்மா சிவபாதசுந்தரஞ் செட்டியார் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். கல்லூரி அதிபர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டம் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட கிராமசேவையாளர் திரு. எஸ். சின்னத்தம்பி. செல்வி க. பரமேஸ்வரி, திரு. ஆர். முத்துக்குமாரு ஆகியோர் திருமதி தங்கம்மாவின் சேவைநலன்களைப் பாராட்டிப் பேசினர். திருமதி தங்கம்மா தன்னைக் கௌரவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## புதிய ஜே. பியாக நியமனம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரத்தைச்சேர்ந்த திரு பொ. இராசசுந்தரம் புதிய சமாதான நீதிபதியாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'சத்தியத்தின் சொரூபம்'

மீசாலை, திங்கள்

''சத்தியத்தின் சொரூபம் காந்திமகான் தோல்வியைக் கண்டறியாதவர். இறைப் பற்றுடையவர். மறந்து ஒரு பொய்யுரை கூறினும் அதற்கு மனமுடைந்து கழுவாய் தேடுபவர். இவரின் வாழ்வு இளைஞர்களுக்கு ஓர் கலங்கரை விளக்கமாக அமைகிறது'' என்று கலட்டித்திடல் காந்திய சேவா சங்கத்தின் ஆதரவில் நாகேஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற காந்தி தின விழாவில் தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினார்.

சமூக ஏற்றத்தாழ்வை காந்தி காட்டிய வழி நின்று போக்கடித்து சகிதர் சமானமாக யாவரும் வாழ வேண்டும் என்று திரு. ஆ. முத்துக்குமாரு கூறினார்.

ஸ்ரீமதி தங்கம்மா சிவபாதசுந்தரஞ்செட்டியார், செல்வி பரமேஸ்வரி கனகசபை ஆகியோரும் பேசினர்.

## ஆங்கில பேச்சுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற தங்கப்பதக்கத்திற்கான பேச்சுப்போட்டியில் முத்துத்தம்பி என்ற மாணவன் முதற்பரிசைப் பெற்றார். மேற்பிரிவு மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டியில் 6 மாணவர் கலந்துகொண்டனர். இரண்டாம் பரிசு தர்ம அன்பன் என்ற மாணவருக்குக் கிடைத்தது.

இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக திரு. பி. சவரிமுத்து, டிறக்டர் ஏ. அன்ரனி, முன்னாள் தொழில் கமிஷனர் திரு. பொன்னையா ஆகியோர் கடமையாற்றினர்.

## எதிரி வரவில்லை விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு கிளப்பில் சூதாடியதாக பத்து பேர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பதில் நீதிபதி திரு. எஸ். சி. கதிரவேலு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகளில் ஒருவர் கோர்ட்டிற்கு வராததால் விசாரணையை பதில் மாஜிஸ்டிரேட் இம்மாதம் 26-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிகள் சார்பில் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் ஆஜரானார்.

## வரி கமிஷன் விசாரணை

கொழும்பு, திங்கள்

வரி விதிப்புமுறை சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள கமிஷன் இம்மாதம் 7-ம் திகதி பகிரங்கவிசாரணையை மேற்கொள்ள இருக்கிறது. சேர் ஆர்தர் ரணசிங்காவைத் தலைவராகக்கொண்ட இக் கமிஷனில் திரு. எல். ஏ. வீரசிங்கா, திரு. ஏ. ஏரியலி ஆகியோர் அங்கம்வகிக்கிறார்கள்.

இக் கமிஷன் தனது அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சகலவித வரிகளையும் ஒரு அமைப்பு முறையின் கீழ் கொண்டுவருவதற்[illegible] ஒரு [illegible] எதிர்பார்க்கப்படுகிறது.

## 'இது குற்றமென்றால் என் மனைவியும் குற்றவாளி'

### மல்லாகம் மாஜிஸ்திரேட் குறிப்பு

மாவிட்டபுரம், திங்கள்

'இந்த வழக்கில் எதிரி குற்றவாளி என்றால் நானே எனது மனைவியையும்பொலிசார் கைதுசெய்யவேண்டி ஏற்படும்' என்று மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. டி. எஸ். நித்சிங்கா தமது முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கொன்றில் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் சுன்னாகத்தைச் சேர்ந்த நல்லதம்பி செல்வரத்தினம் என்பவர் கடந்த யூன் மாதம் 16-ந் தேதி யாழ்ப்பாணத்திலிருந்து 154 ருத்தல் மில்சாட் அரிசியை அனுமதியின்றி சுன்னாகத்துக்கு காரில்கொண்டு வந்ததாக சுன்னாகம்பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிர்தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஜி விஜயசூரியா வழக்கை நடத்தினார்.

வழக்குவிசாரணைக்கு எடுக்கப்பட்டதும் எதிரி தரப்பில் ஆஜரான திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் மாஜிஸ்திரேட்டிடம் இக்குற்றச்சாட்டைப் பொலிசாரால் திருபிக்கமுடியாது என்றும் ஒரு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் எல்லைக்குள் இருந்து இன்னுமொரு உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் எல்லைக்குள் கொண்டு செல்வதனைத் தடை செய்வதே சட்டத்தின் நோக்கம் என்றும் ஆனால் இச்சம்பவம் ஒரேகட்டுப்பாட்டதிகாரியின் எல்லைக்குள்ளே நடந்து இருக்கிறதென்றும் இது குற்றமாயின் ஒரு பெண் தனதுவீட்டு 'ஸ்ரோர்'விருந்து சமையலறைக்கு அரிசி எடுத்துச் செல்வதும் குற்றமாகிவிடவேண்டும் என்றும் கூறி தனது வாதத்துக்குநீதியரசர் திரு. வல்லிஹோரத்தின் தீர்ப்பொன்றை ஆதாரமாகக் காட்டினார்

மாஜிஸ்திரேட் இதனை ஏற்று பொலிசாரிடம் 'இது ஒருகட்டுப்பாட்டதிகாரியின் எல்லைக்குள் நடந்ததா?' எனக் கேட்டார். பொலிசார் 'ஆம்' என்று பதிலளித்தனர். மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளிக்கையில், சட்டத்தில் இக்குற்றம்பற்றி தெளிவாகக் குறிப்பிடாவிட்டாலும் அதன் தாற்பரியத்தைப் பொலிசார் உணரவேண்டும் என்றும் அப்படி உணராத பட்சத்தில் நாளைக்கு எனது மனைவி இன்னொரு வீட்டிலிருந்து அரிசி வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வரும்போது பொலிசார் கைது செய்து குற்றம்சாட்டி வழக்குத் தொடரலாம் என்றும் குறிப்பிட்டார்.

## நீரில் மூழ்கி மரணம்

திருநெல்வேலி, திங்கள்

சின்னத்துரை விஜயராசா (3 வயது) என்ற சிறுவன் நேற்றைய தினம் நீரில் மூழ்கியதால் மரணமான சம்பவம் மண்டைதீவில் நடைபெற்றது.

இவரது மரணம் சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அ. வல்லிபுரநாதன் மரணவிசாரணை நடத்தினார். சிறுவனின் தந்தையான சின்னத்துரை, தாயான கனகம்மா, சகோதரி இராசேஸ்வரி ஆகியோர் சாட்சியமளித்தனர். தற்செயலாகக் கிணற்றுள் இறங்கியபோது நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் மரணம் ஏற்பட்டதாக மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## பாடசாலைகள் நாடகவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

திருநெல்வேலி, செவ்வாய்

இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக் குழுவினர் திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியில் நடாத்தும் வருடாந்த பாடசாலைகளின் நாடகவிழா நேற்று ஆரம்பமாகியது. இன்றிரவு இவ்விழாவில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியினரின் ''ஜீவமணி'', எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயத்தினரின் ''மீனவர்கள் நாட்டுக் கூத்து'', மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தினரின் ''பார் கொலைகாரன்'' ஆகிய நாடகங்கள் இடம் பெறும்.

## சிறுமி மரணம்: தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு. செவ்.

20 அடிஆழமான கிணற்றுக்குள் 5 வயது சிறுமியான பட்றிசியா பீரிஸ் என்ற சிறுமி வீழ்ந்து மூழ்கிய சம்பவம் ஹொரஹலையில் நடந்துள்ளது.

பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் இச்சிறுமி, குடலில் ஏற்பட்ட வெடிப்பின்காரணமாக மரணமானாரென்று மரண விசாரணையின் போது கூறினார். பாணந்துறை நீதிபதி ஜே. எஸ். பொன்சேகா, தொடர்ந்து விசாரணை நடத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டு, தீர்ப்பளிப்பதைப் பின்போட்டார்.

இதுசம்பந்தமாக இவரது தாயாரும் ஆசை நாயகி எனக் கருதப்படுபவருமான ஒரு பெண் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். வேலைக்காரப் பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டு ரட்சணிய சேனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

### பிரதமர் நன்றி

யாழ்ப்பாணம், செவ்வாய்

பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் யாழ்ப்பாண விஜயத்தின்போது பிரபல வர்த்தகர் திரு. எம். குமாரசாமிப்பிள்ளை பிரதமருக்கு வெள்ளி பன்னீர் செம்பு ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

பிரதமர் இது குறித்து திரு. குமாரசாமிப்பிள்ளைக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.


எதிர்பாருங்கள்!

உங்கள் அபிமான சினிமா நட்சத்திரம்

ஈ. வி. சரோஜாவும் குழுவினரும்



5-ம், 6-ம் திகதிகளில் நடைபெறவிருந்த நாட்டிய நிகழ்ச்சிகள் காத்திராப்பிரகாரமாக 14-10-66—15-10-66-ம் திகதிகளில் நடைபெறும் 5-10-66-ம் திகதிக்கு வழங்கிய பிரவேசச் சீட்டுகள் 14-10-66-ம் திகதிக்கும், 6-10-66-ம் திகதிக்கு வழங்கிய பிரவேசச் சீட்டுகள் 15-10-66-ம் திகதிக்கும் செல்லுபடியாகும்.

திருக்கேதீஸ்வரம் பாலாவிப் பிள்ளையார் கோவில் கட்டட நிதிக்காக

நாட்டிய நிகழ்ச்சிகள்

14-10-66——15-10-66

யாழ். திறந்த வெளிஅரங்கில் நடைபெறும்.

இன்றே உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்யுங்கள்

(யாழ். இ. போ. ச. இந்து ஊழியர் சங்கம்)

இம்மாற்றத்தால் ஏற்பட்ட அசௌகரியத்திற்காக இ. போ. ச. இந்து ஊழியர் சங்கத்தார் தங்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்



## மரண அறிவித்தல்

அராலி தெற்கைச் சேர்ந்த மலாயா பென்சனர் சைவப்பிரசாரகர் திரு. வே. கந்தையர் அவர்கள் 2-10-66 இரவு இறைவன் திருவடி எய்தினார். இவர் சுந்தரம்மாவின் அருமைக் கணவரும், கோலாலம்பூர் மலாயா பாரிஸ்டர் வே. க. பாலசுந்தரம், கொழும்பு கல் வைத்தியசாலை பல் வைத்தியர் க. விக்னேஸ்வரகடாட்சன் ஆகியோரின் தந்தையும், திருமதி இன்பம் பாலசுந்தரம் அவர்களின் மாமனுமாவர். அவரது இறுதிக் கிரிகைகள் 5-10-66 காலை 8 மணியளவில் அராலி தெற்கில் நடைபெறும்.

1014


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org